பக்கங்கள் 12 | விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 27-8-61 ஞாயிறு | இதழ் 11

## வரிப் பணம்

### எப்படிச் செலவாகிறது?

### 'கமிஷன்'களுக்கும் ஒரு பங்கு!

சிக்கனத்தைப்பற்றியும், தியாகங்களைப்பற்றியும் பேசுகின்ற மந்திரிகளும், பாராளுமன்றப் பிரதிநிதிகளும் அரசாங்கம் பல பல விஷயங்களில் எவ்வளவு அநியாயச் செலவுகளைச் செய்கின்றதெனச் சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரிவதில்லை. சமீபகாலத்தில்நிறுவப்பட்ட கமிஷன்களின் செலவுத் தொகைகளை ஒருமுறைபாருங்கள்!

புத்த சாசன கமிஷன்:
ரூபா 306,482-00

வாழ்க்கைச் செலவு திருத்தக் கமிட்டி:
ரூபா 359724-00

சம்பளக் கமிஷன்:
ரூபா 215124-00

திருமண விவாகரத்து கமிஷன்: ரூபா 164,797-00

தபால் தந்தி இலாகா விசாரணைக் கமிட்டி:
ரூபா 56,790-00

தூக்குத்தண்டனைகமிஷன்
ரூபா 41691-00

இவை தவிர இன்னும் பல விசாரணைக் கமிஷன்களும் உண்டு. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருபுதிய கமிஷனை நியமித்தபடியே தான் அரசாங்கம் இருக்கின்றது.

இந்தத் தண்டச் செலவுகளுக்கெல்லாம் எங்கிருந்துபணம் வரும்? புது வரிகளைக் கண்டுபிடிக்கவேண்டியதுதான்!

# தேசீயமயத் திட்டங்களின் நட்டம்

# வரிகளாக வருகிறது!

அரசினரால் நடத்தப்பட்டு வரும் பதினெட்டு கார்பரேஷன்களுள் ஆக நான்கே நான்கு மட்டும் தான் சென்ற வருடத்தில் லாபத்தைத் தந்திருக்கின்றன. மற்றைய பதினன்கும் படுமோசமான நஷ்டத்தையே தந்திருக்கின்றன.

சிமிந்தி கார்பரேஷன்:
ரூபா 4893292-00

போட் கார்க்கோ கார்பரேசன்:
ரூபா 1611559-00

பிளைவூட் கார்பரேஷன்:
ரூபா 713510-00


லெதர் கார்பரேசன்:
ரூபா 88059-00

இவைமட்டுமே லாபம் தந்த தொழில்கள் ஆகும். இலங்கைப் போக்குவரத்துச் சபை, பரந்தன் கெமிக்கல்ஸ், வாழைச்சேனை பேப்பர்த் தொழிற்சாலை, கந்தளாய் சீனித் தொழிற்சாலை, எண்ணெய், செருப்பு, உற்பத்திச்சாலை, உப்புக் கார்பரேஷன், காட்போட் தொழிற்சாலை என்பனபோன்ற எஞ்சிய பதினன்கு கார்பரேஷன்களும் நஷ்டத்திலேயே நடைபெற்று வருகின்றன. நஷ்டமென்ருல் சாதாரண நஷ்டமல்ல-பலகோடி ரூபாய்கள் நஷ்டமாகும். சில தொழிற்சாலைகளில் கணக்குப் பதிவுகூட சரியான முறையில் இருக்கவில்லை என்பதை ஓடிற்றர் ஜெனரல் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிருர்.

நடத்துகின்ற தொழில்களையே சீராக நடத்தத் தெரியாத அரசாங்கம் மேலும் பல தொழில்களை தேசியமயமாக்க நினைக்கின்றது. இந்த 'தேசியமய' பைத்தியம் எப்போது தெளியுமோ தெரியாது! இந்தத் 'தேசீயமயத்' தொழில்களினுல் ஏற்படும் கோடிக்கணக்கான ரூபா நட்டங்களைச் சமாளிப்பதற்கு ஆகாயத்திலிருந்து பணம் வந்து கொட்டப்போவதில்லை. புதிய புதிய வரிகளின் மூலமும் வேறு வழிகளிலும் பொதுமக்களிடமிருந்துதான் இந்தப் பணத்தை அரசாங்கம் கறந்தெடுக்கவேண்டும்!

தொழில் வளத்தைப் பெருக்குவதற்குப் பதிலாக, தொழில்களைத் தேசியமயமாக்கிவிடுவதனுல் ஏற்படும் பலன், இந்நாட்டைப் படுமோசமான நிலைக்குக் கொண்டுபோய்விடுமென்று அஞ்சப்படுகிறது.

'தி.மு.க.வும் தென்னக அரசியலும்'
"சுகுமாரன்"
எழுதும்
ஆய்வுக்கட்டுரை
அடுத்த இதழில்
படங்களுடன்!




" நாட்டின் முன்னேற்றத்துக்கு வர்த்தகர்களும் உதவி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது "
— செய்தி.

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**27-8-61 முதல் 2-9-61 வரை**

**மேடம்:** தேகசுகம் இன்னும் திருப்திகரமாக இருக்காது. வயிற்றில் ரோகங்கள் காணப்படலாம். வாக்குக் கலகங்களும் ஏற்படலாம். அதிக பிரயாசத்தின்பின் எடுத்தகருமங்களில் வெற்றியுண்டு.

**இடபம்:** குடும்பச் சச்சரவுகள் தொடர்ந்து ஏற்பட்டவண்ணம் இருக்கும். மனதில் அமைதி நிலவாது. தொழிலைப் பொறுத்த வரையில் வெற்றிகளுண்டு. பொருள் லாபமும் ஏற்படும்.

**மிதுனம்:** தொழில் விஷயங்களில் தொடர்ந்து அநுகூலங்கள் காணப்படுகின்றன. முதலில்சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளித்துக் கருமங்களில் வெற்றியீட்டமுடியும். நண்பர்களால் பல உதவியுண்டு,

**கடகம்:** முன்னிருந்த சங்கடங்கள் சில நீங்கும். சகோதரரால் நன்மையுண்டு. தொழில் விஷயங்களிலும் வெற்றி ஏற்படும். ஆனல் குடும்பசச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

**சிங்கம்:** எடுத்த விஷயங்களில் வெற்றியீட்டுவதற்குச் சூழ்நிலை சாதகமாக இருக்காது. தீர்மானமாக எக்கருமத்தையும் நிறைவேற்றுவது கஷ்டமாக இருக்கும். ஞாயிறு பிற்பகல், திங்கள், செவ்வாய், வாரங்களை அவதானமகச் செலவிடவும்.

**கன்னி:** வாரத்தின் முதல் இரண்டு நாட்களிலும் எடுத்த கருமங்களில் வெற்றி ஏற்படும். செவ்வாய் பிற்பகலும், புதன்கிழமை, வியாழக் கிழமைகளிலும் மனதில் அமைதி நிலவாது. அடுத்த நாட்களில் மீண்டும் நற் பலன்கள் காணப்படுகின்றன.

**துலாம்:** வார முற்பகுதியில் தொழில் முன்னேற்றமும், பொருள் விருத்தியும் உண்டு. பெரியோர் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும் பல உதவிகள் கிட்டும். வெள்ளி, சனி, வாரங்கள் அவதானமாகச் செலவிடவும்.

**விருச்சிகம்** தொழில் விஷயத்தில் எந்த எதிர்ப்புகளையும் சமாளித்து வெற்றியீட்ட முடியும். கருமங்களை வெகுஇலகுவாக முடித்து அதிக லாபமும் காண்பீர்கள். நண்பர்கள் மூலமாகப் பலவித உதவிப் பேறு உண்டு.

**தனுசு:** பொருள்லாபமுண்டு. குடும்ப சச்சரவுகளும் நீங்கலாம். முன் முதலீடுசெய்தவற்ருல் வருவாயுண்டு. ஆனல் பிதாவின் தேகநிலை பாதிக்கப் படலாம்.

**மகரம்:** தொடர்ந்து இவ்வாரத்திலும் சங்கடங்கள் பல காணப்படுகின்றன. மனதில் அமைதி நிலவாது. பிதாவழிக் கஷ்டமும் காணப் படுகின்றது. தேகத்தைப் பேணவும்.

**கும்பம்:** குடும்பத்தில் தொடர்ந்து சங்கடங்கள் ஏற்பட்டவண்ணம் இருக்கும். இடையருத யோசனையும் தேகசுகவீனமும் காணப்படுகின்றன. ரகசிய சத்துருக்களால் சில சங்கடங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** கருமங்களில் தொடர்ந்து வெற்றியுண்டு. எதிர்ப்புக்களைச் சமாளித்து முன்னேற இடமுண்டு. மனேஉற்சாகமும், கீர்த்தியும் ஏற்படும். ஆனல் குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## மீசை நரைத்தும் ஆசை நரைக்காத கிழவர்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறது!

வாலிபர்களும், வாலைக் குமரிகளும் இளமைப் பருவத்தில் ஒருவரை ஒருவர் பார்த்து அழகை ரசித்துக் கொள்ளுகிருர்கள் அதே நேரத்தில், ஒரு கிழவன் பருவப் பெண்களையும்; கிழவி கட்டிளங்காளைகளையும் கண்டு அவர்கள் அழகில் சொக்கிவிடுவதுமுண்டு! கிழவர்களுக்கும் அழகை ரசிக்கும் மனப்பண்பு இருந்தாலும், அதனை அனுபவிக்கும் பாக்கியம் அவர்களுக்கில்லை. காரணம் வயோதிகம்தான்!

உடல் கிழட்டுத்தன்மையடைவதற்கு முக்கிய காரணம், உடலில் விஷங்கள் சேர்வதுதான் என்று பல நிபுணர்கள் கருதுகின்றனர். நாம் உண்ணும் உணவிலிருந்து கூட இந்த விஷங்கள் தோன்றக்கூடுமாம்! குழந்தைப் பிராயத்திலும் வாலிபப் பருவத்திலும் உடலின் இயற்கைச் சக்தியே இந்த விஷங்களை அழித்துவிடுமாம். ஆனல், பிற்காலத்தில் வயது ஏற ஏற உடலின் எதிர்ப்புச் சக்தி குறையும் காரணத்தால், விஷத் தன்மை உடலைத் தாக்கி, நோய்களுக்கு இடம் கொடுத்துவிடுகின்றன,

இந்த விஷங்களை உடலிலிருந்து நீக்கிவிடக் கூடிய பொருட்களைக் கண்டு பிடிப்பதில் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். அது கொழுப்புச் சத்து இல்லாத புதுவகையான உணவாக இருக்குமாம்!

''மனிதர்களின் உணவைக் கெடுக்கும் முக்கியமான பொருள் கொழுப்புத்தான்'' என்று பெல்ஜிய நிபுணரான லூஷியன் பிரல் என்பவர் கூறுகிருர். மேலும், ''ஆகாரக் கட்டுப்பாட்டின் மூலம் உடல் கொழுப்பதைத் தடை செய்யலாம்'' என்று அவர் வற்புறுத்திக் கூறுகிருர்:

''எவ்வளவுக் கெவ்வளவு நாம் அதிகமாகச் சாப்பிடுகிருேமோ, அவ்வளவுக்கவ்வளவு நம் உடலில் விஷங்களும் அதிகரிக்கின்றன. எனவே, குறைவாவாகச் சாப்பிடுவதுதான் சிறப்பு'' என்று டக்டர் விளாடிமீர் கொரேன் செவ்ஸ்கி என்ற லண்டன் நிபுணர் சொல்கிருர். ரஷ்யாவில் 90 வயதுக்குமேல் ஆனவர்கள் 40,000 பேர் இருப்பதாகக் கூறப்படுகிறது. உக்ரேனில் மாத்திரம் 100 வயதுக்கு மேல் ஆனவர்கள் 2,700 பேர் இருக்கிருர்களாம்!

நெப்போலியன் காலத்தில் வாழ்ந்தவர்கள் உயிருடன் இருப்பதாகவும்! அவர்களில் ஒருவருக்கு 148 வயதும், மற்ருெருவருக்கு 143 வயதும் ஆகிறதென்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் செய்திகள் வெளியான்தை நம் வாசகர்கள் படித்திருக்கக்கூடும்:

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களுக்கு புத்துயிர் கொடுக்கும் புது முறை ஒன்றைத் தாங்கள் கண்டு பிடித்திருப்பதாக ரஷ்ய நிபுணர்கள் கூறுகின்றனர். ஒரு சதவிகிதம் சோடா கலந்த திரவத்தை உடலினுள் செலுத்திஞல், உடலிலுள்ள உயிரணுக்கள் இளமை பெறுகின்றனவாம். சோடா தண்ணீரில் குளித்து வருவதாலும் அளமை அதிகரிக்கின்றதாம்! மீசை நரைத்தும், ஆசை நரைக்காத கிழவர்கள் பாடும் இனிக் கொண்டாட்டம் தான் என்று சொல்லத் தேவையில்லையல்லவா?

## வரிக்கு டிமிக்கி கொடுப்போரைக் கண்டுபிடிக்க புதிய இலாகா

அரசாங்கத்தின் புதிய வரித்திட்டத்திற்கு 'டிமிக்கி' கொடுப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்கென ஒரு புதிய இலாகாவை நியமிப்பதென்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தற்போது அரசாங்கத்திற்கு வரி செலுத்துவோரில் பெரும் பாலோர், தங்களுக்குக் கிடைக்கும் பிற' சில்லறை வருமானங்களுக்கு வரி செலுத்துவதில்லையாம்!

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் இந்த ஸ்தாபனம், வருமானவரி இலாகாவின் மூலம், வரிகொடுக்காமல் 'டிமிக்கி' கொடுப்பவர்களைக் கண்டுபிடித்து, வரி வசூலிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

போன்: 281 (9 தொடர்புகள்) தந்தி: ஜுவல்லர்ஸ்

அழகு மிக்க

பவுண், வைர ஆபரணங்களுக்கு

சிறந்த இடம்

எல். கே. எஸ்.

தங்கமாளிகை

★ இலங்கையின் மிகப்பெரிய ★

பவுண், வைர நகை வியாபாரிகள்

யாழ்ப்பாணம்.


கிளை: L. K. S. ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்.

## ஆசிரிய கலாசாலையில் சேர்க்க

# லஞ்சம் கேட்டார்!

'நல்லூர் அரசினர் நெசவு ஆசிரியர் பயிற்சிக்கலாசாயில் சேர்ந்து படிப்பதற்கு விருப்பமானல் ஆளுக்கு ரூபா நூறு வீதம் தாருங்கள். தெரிவு செய்யப்படவில்லையானல் பணம் திருப்பித்தரப்படும்' - இவ்விதம் நெசவுநிலைய உத்தியோகத்தர் ஒருவரே, உருத்திரபுரம் காந்தி நெசவு நிலைய மாணவிகள் சிலரிடம் கேட்டதாக கிராமாபிவிருத்தி இலாக்கா அதிகாரிக்கு ஒரு புகார் அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்படி காந்தி நெசவு நிலையநிர்வாகி திரு. சி. க. வேலாயுதபிள்ளையே இந்தப் புகாரை அனுப்பியுள்ளார்.

## செல்லப் பிள்ளையின் குற்றச்சாட்டு




# திரை மறைவில்

### தவருன தீர்ப்பு:

நிதி மசோதா விவாதத்தின்போது சனப்பிரதிநிதிகள் சபையில் ஒழுங்கற்றமுறையில் நடந்துகொண்டதற்காக பொரலகொடைச் சகோதரர்கள் சபையின் சேவையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டார்களல்லவா? அவர்களிருவரும் நிறுத்திவைக்கப்பட்ட முறையையிட்டு எதிர்க்கட்சி வட்டாரங்களில் பலத்த அதிருப்தி நிலவுகின்றது. புரட்சியின் முன்னைநாள் தந்தை பிலிப் குணவர்த்தன அநீதியான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவே அவர்கள் கருதுகிருர்கள். "பாராளுமன்ற ஒழுங்கு முறைகள்" என்ற பெரிய புத்தகத்தைக் கையிலெடுத்து அதை வாசித்துக் காட்டுவதற்காகவே பிலிப் குணவர்த்தன அப் புத்தகத்தை நீட்டினுர்; சபாநாயகருக்கு எறிவதற்காகவல்ல. பிலிப் குணவர்த்தன புத்தகத்தால் தனக்கு எறிய ஓங்கியதாகச் சொல்லியே அவரை ஒரு வாரம் தடுத்து வைத்தார் சபாநாயகர். இச்சம்பவத்தில் சபாநாயகர் தவறிழைத்துவிட்டார் என்றே எதிர்க்கட்சியினர் கருதுகின்றனர்.

### சபாநாயகர் மீறிய மரபு:

இச்சம்பவத்தில் ஒரு முக்கியமான பாராளுமன்ற ஒழுங்கு முறையும் சம்பந்தப்பட்டுள்ளது. சபாநாயகரை நோக்கித் தான் புத்தகத்தை ஓங்கவில்லையென்று பிலிப் குணவர்த்தன சபையிலேயே தெரிவித்தார். சபையில் ஒரு அங்கத்தவர் கூறுவதை உண்மையென ஏற்றுக்கொள்வதே மரபு. இந்தமரபையும் ஒழுங்கு முறையையும் அமுல்செய்யும் சபாநாயகரே பிலிப் குணவர்த்தன கூறியதை ஏற்க மறுத்தது தவறென்பது பல அங்கத்தவர்களின் கருத்தாகும்.

### என்றுமே நிகழாத சம்பவம்:

சனப்பிரதிநிதிகள் சபைக்குள் நடைபெற்ற பல மோதல்களையும் கதிரை தூக்கும் சம்பவங்களையும் நேரில் பார்த்திருக்கிறேன்: பண்டாரநாயக்கா அரசாங்கத்தின்காலத்தில் தொழிலமைச்சராக இருந்த எம். பி. டி. சொய்சா (இலஞ்ச விசாரணைக் கமிஷனல் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டவர்) வைத் தாக்குவதற்காகக் கதிரையைத் தூக்கிய சம்பவத்தையும் நேரில் பார்த்திருக்கின்றேன். ஆனல் எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் கதிரையைத் தூக்கிக்கொண்டு அரசாங்கக் கட்சியில் கடைசி வாங்கில் இருக்கும் ஒருவரை அணுகிய சம்பவத்தை நான் முன்பு எப்பொழுதுமே பார்த்ததில்லை. நூரளைப் பிரதிநிதி வில்லியம் பெர்னுன்டோ தடுத்திராவிட்டால் களனிப் பிரதிநிதி ஆர். எஸ். பெரேராவின் தலையில்தான் கதிரை விழுந்திருக்கும்.

### நிதியமைச்சரின் பயம்:

எவரும் எதிர்பாராத வகையில் அவசரப்பட்டு நிதிமசோதா விவாதத்தை ஒரே தினத்தில் நடத்தி முடிக்க மந்திரி சபை முடிவுசெய்ததல்லவா? அப்படி அவர்கள் செய்தமைக்கு நிதியமைச்சரின் மனதில் தோன்றியுள்ள பயமே காரணமாம். நிதி மசோதா நிறைவேறுவதைப் பின் போட்டால் அரசாங்கக் கட்சியின் அங்கத்தவர்களே புதிய வரிகளை எதிர்க்கக் கூடுமென்று நிதியமைச்சர் கருதியே அந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்காக அவசரப்பட்டு நிதிமசோதாவை அவர் நிறைவேற்றியிருக்கிருரென அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன.

### சுப்றீம் கோட்டிலும்:

நிதிமசோதாவில் இலங்கை வங்கி தேசியமயத்தையும் சேர்த்திருப்பது சட்டவிரோதமானது என்று ஐக்கியதேசியக் கட்சியினர் விவாதித்தார்களல்லவா! நிதிமசோதா சட்டமானதும் அதைச் சுப்ரீம் கோட்டிலும் எதிர்க்கச் சிலர் ஆயத்தம் செய்வதாகத் தெரிகிறது.

### உண்மை உணர்ச்சிகள்:

புதிய வரிகளைப்பற்றி உதவி அமைச்சர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன் சில தினங்களுக்கு முன்பு. "நான் இப்பொழுது அரசாங்க சேவையில் இருந்தால் இந்தப் புதிய வரிகளைக் கண்டிப்பதுடன் நிறுத்திக்கொள்ளமாட்டேன். ஒரு பெரிய போராட்டமே நடத்துவேன்" என்று சொன்ஞர் அவர்.

### நடிக்கமுயலும் நிதியமைச்சர்:

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியிலிருந்து இராஜினுமாச்செய்த பாராளுமன்றப் பிரதிநிதியொருவருடன் சிலநாட்களுக்குமுன்பு பேசிக்கொண்டிருந்தேன். அப்போது நிதியமைச்சரைப் பற்றிய தகவல் ஒன்றைச் சொன்ஞர் அவர். "இப்போது சோஷலிசத்தைப் பற்றிப் பேசும் இந்த நிதியமைச்சர் காலஞ்சென்ற பிரதமர் இறக்கும்வரையும் சோஷலிஷத்தைப் பற்றியோ இந்தநாட்டைப்பற்றியோ கவலை கொள்ளவில்லை. இந்த நாட்டில் வசிக்க முடியாதுஎன்று கூறி இங்கிலாந்தில் போய் வசிக்க ஆயத்தங்கள் செய்தார். இன்று தனக்கு ஒருவருக்குத்தான் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இருப்பதாகநடிக்க முயலுகிருர்.

—'அம்பலத்துறைவோன்'

## உடனே தேவை

ஆனந்தா திருக்குறள் கலண்டர்கள், டயறிகளுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓடர்கள் எடுக்கவும், ஆனந்தா அச்சகத்துக்கு அச்சு வேலை ஓடர்கள் எடுக்கவும் நம்பிக்கையுள்ள திறமைசாலி ஒருவர் உடனே தேவை. —ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

"ஈழத்துச் சோமு" எழுதும்
சிறிய தொடர்கதை.



"களனிஆற்றில் அவள் விளையாடிய காட்சி என் மனதில் எழுந்தது......"

# களனி நதி தீரத்திலே...

(சென்றவாரத் தொடர்ச்சி)

அந்த 'விசுவாமித்திரப் பார்வை'ச் சம்பவம் நடந்து ஒரு வாரத்துக்கும் மேலாகிவிட்டது. நாங்கள் அவளைப்பற்றிப் பிறகு நினைக்கவோ சந்திக்கவோ இல்லை. நான் அந்தச் சம்பவத்தைக்கூடப் பெரிது படுத்தவில்லை. நடராசனைப் பொறுத்தவரை இது சர்வ சாதாரணம். கொழும்புக்கு வருவதற்கு முன்பு ஊரிலிருந்த நாட்களிலேயே எங்கள் கிராமத்து கோவில் திருவிழாக்களிலும், சினிமாக்களிலும் பெட்டைகள் பலரினதும் முறைப்பான பார்வைகளையும், அனல் கொதிக்கும் பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல் தனது துடுக்குத்தனமான நையாண்டிகளால் அவர்களையெல்லாம் ஒரு கலக்கு கலக்கியவன்! நடராசனுக்கு இப்படி விசுவாமித்திரப்பார்வைகள் எருமை மாட்டில் மழை பொழிவபோல ஆகிவிட்டது!—

நாங்கள் வழக்கமாக எட்டு மணிக்கே கந்தோருக்குப் புறப்பட்டுவிடுவோம். வழியிலிருக்கிற சைவக்கடை யொன்றில் இலேசாக வயிற்றை நிரப்பிக்கொண்டு எட்டேகாலுக்கு "ட்ரொலி" பஸ்ஸில் ஏறிவிடுவோம். அந்தப் பஸ் வண்டி மாடுகளிலும் ஒழுங்காக தெருவின் ஓரமாக நடக்கத் தெரியாத இரண்டு கால் மாடுகளிலும் முட்டி மோதி, புறக் கோட்டையை ஊடறுத்து, ஊர்ந்து கோட்டையைச்சேர எப்படியும் ஒன்பது மணியாகிவிடும்!

அன்று காலையிலிருந்தே மழை பொழியத் துவங்கிவிட்டது. மழை இலேசாக ஓய்கிறபொழுது நேரம் எட்டுக்கும் மேலாகிவிட்டது. நானும் நடராசனும் அவசர அவசரமாக தெருவில்இறங்கி "ட்ரொலி" பஸ் தரிப்பை நோக்கி நடை போட்டுக்கொண்டிருந்தோம். அன்று சைவக் கடையில் சாப்பாட்டுக்குச் செல்வதற்கு நேரம் போதாமலிருந்ததால் பஸ்ஸைப் பிடிக்க குறுக்கு வழியால் இறங்கி சென்றுகொண்டிருந்தோம். அந்தச் சந்தியால் நாங்கள் திரும்பியபொழுது நமக்கு முன்னே ஒரு பெண் கெதியாகப் போய்க்கொண்டிருந்தாள். நீலச்சேலை, நிமிர்ந்த நடை, ஒரு கையில் டம்பப்பை, பிற்புறம் பார்க்க மிக ஒய்யாரமாக இருந்தது. நாங்கள் வேக நடையில் அவளைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தோம்!

ட்ரொலி பஸ் தரிப்புக்கு வந்துவிட்டோம். ஏற்கனவே அந்த 'கியூ'வின் வால் விசுவரூபமெடுத்து வளர்ந்து போய்ச் சுருண்டிருந்தது. அந்த ஒய்யாரி அதில் போய் ஒட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அடுத்ததாக நடராசன்; அவனுக்குப் பிறகு நான்; எனக்குப் பின்னும் அது வளர்ந்துகொண்டேயிருந்தது!

நடராசன் எனது கையைச் சுரண்டினான். அந்த ஒய்யாரியைக் கவனிக்கும்படி தன் கண்களால் ஏவினான். அவளைப் பார்த்தேன்.–அவள் அவளேதான்!– அந்த களனிக் கரையில் கண்ட மோகினிதான்!

எனது தோழன் அவளது ஒவ்வொரு அவயவமாக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை நுட்பமாக கவனித்து—அழகுராணிப் போட்டியில் பங்கு பற்றுபவர்களது அங்கங்களை நீதிபதிகள் அவதானிப்பதுபோல, கூர்மையாக கணிப்பெடுத்துக் கொண்டிருந்தான்! அவள் முகத்தில் சாதாரணத்துக்கும் கூடுதலான அழகும் பொலிவும் நிறைந்திருந்தபோதும், இலேசான பயம் கலந்த வேதனையும் கலந்திருந்தது.—

நடராசன் மெதுவாக எனது காதில் கிசுகிசுத்தான்.: "நூறு மாக்ஸ் கொடுக்கலாம் என அன்று முஸ்பாத்தியாக சொன்னதை இன்று நிச்சயமாக கொடுக்கிறேன்"

"வீணாக வாயைக்காட்டி நாலு பேர் மத்தியில் அவமானத்தைக் கட்டிக் கொள்ளாதே."— நான் அவனை எச்சரித்தேன்.

முகிற்கூட்டங்களுக்குள் அமுங்கிக்கிடந்த சூரியன் தன் மூச்சு முழுவதையும் ஒன்று சேர்த்துப் பொருதி முகிற் கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு வெளியே தலையைநீட்டினான். நேரம் போய்க்கொண்டிருந்தது. நின்றவர்களின் பொறுமையை ட்ரொலி பஸ்சேவை சோதித்தது. வந்த பஸ்கள் எதுவும் அந்தத் தரிப்பில் நிற்கவில்லை! ஏற்கனவே நிறைந்துவிட்டதால் அவளின் முகத்தில் ஏக்கமும் பீதியும் வளர்ந்துகொண்டிருந்தன; பஸ் வரும் பாதையைப் பார்த்து பதறிக்கொண்டிருந்தாள், அப்படி என்ன அவசரமோ?

ஒன்பது மணியாவதற்கு இன்னும் பத்துநிமிடங்கள் மட்டுமிருந்தன. இன்னும் பொறுமையோடு காத்துநிற்க என்னால் முடியவில்லை. 9.45 க்குள்ஆவது கந்தோரில் நிற்கவேண்டுமே? நடராசனுக்கும் அப்படித்தான். ஆனாலும் அவளது லயிப்பில் இருந்ததால் அவன் என்னைப் போலத் துடித்தானோ இல்லையோ தெரியாது. ராக்சி ஒன்றை மறித்து, நடராசனையும் இழுத்துக்கொண்டு அதனுள் ஏறினேன்.

நாம் இருவரும் ராக்சிக்குள் ஏறிஉட்கார்ந்ததை அவள் ஆவல் நிறையப் பார்த்தாள். நடராசனும் அவளைப்பார்த்தான்;நானும் அவளைப் பார்த்தேன். "கோட்டைக்கு" என ஒரு வார்த்தையில் ஆங்கிலத்தில் நடராசன் கூறினான். "கோட்டை வரைக்கும் எனக்கும் இடம் தருகிறீர்களா? நேரமாகிவிட்டது"—பணிவாக, குழைவாக அந்த அழகி கேட்டாள்!

நடராசன் என்னைப்பார்த்தான். எனக்கு இப்படி தெருவில் கண்டபெண்களையெல்லாம் கூட்டிச் சென்று அனுபவமெதுவுமில்லை! மனம் சிறிது கூசியது.

அவள் ராக்சிக்கு அருகில் வந்துவிட்டாள். "இன்று புதிதாகத் தொழில் ஒன்றை ஏற்கச் செல்லுகிறேன். மிக அவசரம்"—

அவளின் சிவந்த உதடுகளிலிருந்து ஆங்கிலத்தில் அழகாக தயவோடுவார்த்தைகள் உதிர்ந்தன.

கண்கள் கெஞ்சின. நான் மேலும் கல்லுப் பிள்ளையார்போல இருந்து அந்தச் சித்திரப்பொற்கொடியைக் காக்க வைக்கவில்லை. நான் எழுந்து முன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டேன். நடராசனும் அவளும் பின்னுக்கு இருந்தார்கள்.

ராக்சி பறந்தது!

எனக்கு உள்ளம் திக் திக் என்றது, ராக்ஸிவேகத்தைக் கண்டு அல்ல – தெரிந்தவர்கள் யாராவது அந்தக் கோலத்தில் நம்மைக் கண்டுவிடுவார்களோ?..... அப்படி யாராவது கண்டுவிட்டால் யாழ்ப்பாணத்தில் எனது பெற்றோர்கள் முன் எப்படியெல்லாம் செய்தி திரிக்கப்படும்?...... என்றெல்லாம் எண்ணினேன். அவளை நான் திரும்பிப்பார்க்கவில்லை — ஆனாலும் காருக்குள் ஏறியவுடன் தனது கைக்குட்டையால் முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை அவள் துடைத்துக் கொண்டது முன்னுக்கிருந்த சிறிய கண்ணாடியில் தெரிந்தது. பெரிய வாயாடி துடுக்குக்காரன் என்று எல்லாம் கருதப்பட்ட எனது தோழன்கூட அந்த அழகி அருகில் உட்கார்ந்ததும் பேச்சற்று பெட்டிப் பாம்பாக மௌனசாமி ஆகிவிட்டானே!—

ராக்ஸி, பிறின்ஸ் ஒவ் வேல் அவனியூவைத்தாண்டி பாபர் வீதியை எட்டியதும் அவள்தான் முதலில் மௌனத்தைக் கலைத்தாள்.

'அதற்குப் பிறகு நீங்கள் ஏன் ஆற்றுப் பக்கம் வரவில்லை?'' அவள் கேட்டாள்.

எனக்கு வியர்த்துக்கொட்டியது. நம்மை ஞாபகம் வைத்திருந்து நமக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டாளே!

நடராசன் செருமிக்கொண்டு பேசத் துவங்கிவிட்டான்.

"பிறகு வருவதற்கு நேரங்கிடைக்கவில்லை. கந்தோர்வேலை, படிப்பு...... இனி வரத்தான் போகிறோம்."

அவள் கலகலவென்று சிரித்தாள்! அது வெண்கலப் பெட்டிக்குள் வெள்ளி நாணயங்கள் குலுங்குவது போலிருந்தது!

அவள்பெயர் றோசலின்: நாம் வசிக்கிற அதே தெருவின் அந்தத்திலுள்ளது அவள் வீடு! அவளுக்கு தாய் இல்லை; கூடப்பிறந்தவர்களுமில்லை. தகப்பனர் மட்டும் தான் அவளின் ஒரே உரித்தாளி. புதிதாக

(11-ம் பக்கம் பார்க்க)

# கணவனிடம் உண்மை பேசக்கூடாது

## இன்ப வாழ்வுக்குப் பொய் மிக அவசியம்!

தெரிந்தோ தெரியாமலோ வாழ்க்கையில் ஒரு பெண்வழுக்கிவிழுந்து விட்டால்அவளை நிஷ்டூரமாகச் சமூகம்ஒதுக்கிவைத்துவிடுகிறது. புனர்வாழ்வு பெறச் சந்தர்ப்பமில்லாத அவள் மேலும் மேலும் அழிவுப் பாதையிலேயே செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. சொந்தக் குடும்பத்தில் ஏதாவதொரு இழுக்கு ஏற்பட்டதும் அலறிப் புடைப்பவர்கள் பிறர் குடும்ப நிகழ்ச்சிகளைப் பெரிதுபடுத்தி நையாண்டி செய்வதோடு சம்பந்தப்பட்டவர்களை வாழ்வில் தலைதூக்க விடாமல் குழிதோண்டிப் புதைக்கவும் முற்பட்டுவிடுகிறார்கள். இது மனிதப்பண்புக்கு ஒவ்வாத செயலாகும்.

ஒரு சம்பவத்தை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். ஒரு பெண்ணுக்கு விவாகம் நிச்சயிக்கப்பட்டு கல்யாணப் பதிவும் முடிந்துவிட்டது. சட்டப்படி கல்யாணம் முடிந்துவிட்டாலும் நாலுபேரறிய இன்னும் தாலி கட்டவில்லை. கணவனாகப் போகும் படித்த பெரிய மனிதன் அடிக்கடி பெண்ணிடம் வந்து பேசுவதுண்டு. ஒரு நாள் பேச்சுவாக்கில் சினிமாவுக்குப் போக வருகிறாயா?வென்று மனைவியாகப் போகிறவளைக்கேட்டான். அவள் ஒப்புக்கொண்டாள். அவ்வளவுதான், அவன் சினிமாவுக்கு அழைத்துச் செல்லாமலே போய்விட்டான். கல்யாணம் செய்ய முடியாதென்று அவன்கூறியதும் அவள் கதறியழுதாள். அவனுக்குக் கோபம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன தெரியுமா? "நான் கேட்டதும் சினிமாவுக்கு வர ஒப்புக்கொண்டதுபோலத்தானே இவள் இன்னொருவன் அழைத்தாலும் ஒப்புக்கொள்ளுவாள்" என்றானும் அந்த மண்டூகம். எப்படி இந்தக் கணவனின் விபரீத கற்பனை. இவையெல்லாம் பண்பாடற்ற தன்மையைத்தான் காட்டுகின்றன. இத்தகைய புத்திசாலிகளோடு குடும்பம் நடத்தவேண்டிய நிலை ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டால் அவள் வெகுஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும்.

கணவனுடைய பலவீனத்தைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப நடக்கவேண்டும். பொய்பேசவேண்டிய சந்தர்ப்பத்தில் பொய் பேசவேண்டும். கணவனுக்குப் பொய் கூறுவது பாவம் என்று கூறுபவர்கள் உண்மை கூறுவதால் அழிந்துபோகும்வாழ்க்கையைச்சீர் செய்ய உதவுவார்களா?

கணவன் அழகனல்லவென்ற உண்மை ஒரு மனைவிக்குத் தெரிந்திருந்தாலும் 'நீங்கள்தான் சிறந்த அழகன்' என்று வாயாரப் பொய்கூறவேண்டியிருக்கிறது ஒரு மனைவிக்கு. கன்னத்தில் மயிர் நரைக்க ஆரம்பிக்கும்போது தான் வாலிபப் பருவத்தைத் தாண்டி வயோதிகப் பருவத்தின் முதற்படியில் கால் வைப்பது கணவனுக்குத் தெரியும். அது அவனுக்குக் கவலையாகக் கூட இருக்கும். கன்னங்கள் இரண்டும் வெண்பஞ்சுக் கூட்டமாய் நரைத்து விட்டாலும் அவன் மனைவியைப் பார்த்து 'கன்னத்தில் இரண்டொரு மயிர் நரைத்து விட்டது' என்று கவலையோடு கூறுவான். உங்களுக்கு வயசு போய்விட்டது. அதன் விளைவுதான் இது' என்று ஒரு மனைவி உண்மையைக் கூற முடிகிறதா?

"இல்லாத பொல்லாத தொல்லைகளையெல்லாம் நீங்கள் உங்கள் தலையில் போட்டுக்கொண்டு சதா கவலைப்படுகிறீர்கள் அதனால்தான் இந்த வயதிலேயே இரண்டொரு வெள்ளை மயிர் (நரைமயிர் என்று கூறக்கூடாது) தோன்றிவிட்டது. உங்களுக்கென்ன நாற்பது வயதுதானேயாகிறது. மேலவீட்டு முருகேசு போன வருஷந்தானே கல்யாணம் செய்தான். அவனுக்கிப்போ 45 வயதாகிறது......" அவள் வாயாரப் பொய் கூறும்போது கணவனின் மனம் குளிர்ந்துவிடுகிறது.

இன்னுமொரு சம்பவம். குடும்பத்தகராறு காரணமாக ஒருகணவன் மனைவியை விட்டுப் பிரிந்துசென்று வேறு கல்யாணம் செய்துகொண்டான். பெண் வாழாவெட்டியாக இரண்டு வருடங்கள் வீட்டிலிருந்தாள். பெற்றோரும் சகோதரர்களும் மறுமணம்செய்யும்படி அவளை வற்புறுத்தினார்கள். முதலில் அவள் மறுத்தாள். பின் எப்படியோ கல்யாணம் நடந்தது.

ஒருநாள் வீட்டை மெழுகிச் சுத்தஞ்செய்து கோலமிட்டாள். புதுக் கணவன்விசேஷமென்னவென்று விசாரித்ததற்கு தான் அன்று கௌரி விரதம் என்று உண்மையைக் கூறினாள்.

கௌரி விரதம் கணவனின் ஆயுள் பலத்துக்காகப் பெண்கள் அனுஷ்டிப்பதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. புதுக் கணவனுக்கு உள்ளூர மகிழ்ச்சி. ஆனாலும் அவன் கேட்டான்:

"இந்த வருடந்தான் இந்த விரதத்தை அனுஷ்டிக்கிறாயா? அல்லது சென்ற வருடமும் அனுஸ்டித்தாயா?"

(சென்ற வருடம் அவள் வாழாவெட்டியாக வீட்டிலிருந்தாள்.) 'கடந்த 5 வருடங்களாகக் கௌரி விரதமனுஷ்டித்து வருகிறேன்' (அதாவது அவள் முதற் கணவனோடு வாழ்ந்தகாலத்திலிருந்து)

"சென்றவருடம் நீ ஏன் விரதம் அனுஷ்டித்தாய்?"

"கௌரி விரதத்தை இடையே நிறுத்தக்கூடாதென்பார்கள்"

"ஆமாம், அது எனக்குத் தெரியும். இடையே நிறுத்தினால் கணவனுக்கு ஆகாதென்பார்கள். அப்படித்தானே......"

"ஆமாம்" அவள் உண்மை பேசிவிட்டாள். அதன் விளைவு?

"சென்ற வருடம் எந்த புருஷனுக்காக விரதம் அனுஷ்டித்தாய்?"

"நீங்கள் என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்?"

"எல்லாம் புரிந்துகொண்டுதான் பேசுகிறேன். விட்டுப் பிரிந்துபோய் அவன் வேறு கல்யாணம் செய்துகொண்டாலும் அவனை உன்னால் மறக்க முடியவில்லை. அவன் நலத்துக்காகத்தான் நீ இன்றும் விரதம் அனுஷ்டிக்கிறாய்......" கர்ச்சித்தான் அவன். சட்டி பானைகள் உருண்டன. ஊரே திரண்டது. இதில் ஆச்சரியமென்னவென்றால் அயலவர்களெல்லாம் அவன்பக்கமே சார்ந்து பேசினார்கள். அவளை எல்லோருமே சேர்ந்து குற்றவாளியாக்கி விட்டார்கள். நடத்தையில் களங்கம் கற்பித்தார்கள். மறுபடியும் அவள் வாழ்க்கையை நாசம் செய்துவிட்டார்கள். அந்தப் பெண் இப்பொழுதுமிருக்கிறாள், சித்தசுவாதீனமற்ற நிலையில். இது உண்மை விளைவித்த விளைவு.

ஒருபெண் கணவனோடு இன்பமாக வாழவேண்டுமானால் மனமறிந்து பொய்பேசவேண்டும். நாசமாய்ப்போன உண்மையிருக்கிறதே அது குடும்ப வாழ்வைப் பிய்த்து எறிந்துவிடும். ஆண்கள் பண்புள்ளவர்களாக மாறிய பின் வேண்டுமானால் பெண்கள் உண்மையைப் பேசட்டும். அதுவரை இந்த உண்மை வேண்டாம்.

### — டி. ஆர். மகாலிங்கத்தின் — அழகான பல்வரிசை!

சேலம் பட்டுவேட்டி சால்வையுடன் ஆணும், கூறைச் சேலையோடு பெண்ணும் அருகருகே உட்கார்ந்து சினிமாப் பார்க்கிறார்களென்றால் அவர்கள் புதுமணத் தம்பதிகள் என்பது சொல்லாமல்புரிந்துவிடும். இப்படித்தான் ஒருசோடி அன்றும் உட்கார்ந்து படம் பார்த்துக்கொண்டிருந்தது. அவர்களுக்கு நேர் பின்னால் எப்படியோ எனக்கும் 'சீட்' கிடைத்தது.

அது பழைய படம். பி.எஸ். கோவிந்தனும், யூ. ஆர். ஜீவரத்தினமும் சேர்ந்து நடித்தது. படத்தின் பெயர் 'பூம்பாவை' என்று ஞாபகம். கோவிந்தன் உச்சஸ்தாயியில் பாடிக்கொண்டு வந்தான். கணவன் கூறினான்:

"இவன்தான் மகாலிங்கம். நன்றாகப் பாடுவான்......நல்ல நடிகனுங்கூட..."

மனைவி:- மகாலிங்கமா? இவன்தான் கோவிந்தன்......இவனுக்கும் மகாலிங்கத்துக்கும் உருவத்திலோ பாட்டிலோ அதிக வித்தியாசமில்லை......

கணவன்:- இல்லை உனக்குத் தெரியாது. இவன்தான் மகாலிங்கம்.

மனைவி:- இல்லைப் பாருங்கோ, உங்களுக்குத்தான் தெரியேல்லை. மகாலிங்கத்தின் பல்லு முத்துப் பதித்தமாதிரியிருக்கும். கோவிந்தனின் பல்லு மண்வெட்டிபோல. நன்றாய்க் கவனித்துப் பாருங்கோ......

கணவன்:- மகாலிங்கனின் பல் முத்துப் போலையா?

மனைவி:- பின்னையென்ன? அவன் பல்வரிசை எவ்வளவு ஒழுங்காக அழகாயிருக்கும்..."

கணவன்:- ரொம்ப அழகோ?


மனைவி:- சந்தேகமென்ன? அழகுதானே!

கணவன்:- ம்... எழுந்திரடி ......நீ படம் பார்த்தது போதும்......

மனைவி:- ஆட்கள் கவனிக்கிறார்கள் ...... பேசாமலிருங்கோ......

கண:- இந்த லட்சணத்தில் உனக்கு வெட்கங்கூட வருகிறதா? படம் பார்க்க வந்தவள் பல்லையல்லோ கவனிக்கிறாள்!...... எழும்பும்படி சொன்னால்......

படத்தில் கால்வாசியைக்கூடப் பார்க்கவில்லை அந்தஇளந்தம்பதிகள்... பாவம் அந்தக் கணவனுக்கு மற்றவன் பல்வரிசை அழகானதென்று மனைவியின்வாயால் கேட்கச்சகிக்கவில்லை!

"ஏனப்பா அழுகிறாய்? ஒருமுறை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள சன்லைட் டையேர்ஸ் அன்றை கிளீனேஸிடம் போய்வா, என்னைப்போல் நீயும் 'ஜம்'மென்று கவர்ச்சியாக இருக்கலாம்!" போன்: 474

மூன்றும் கட்சி

## சைவ சமயம்

நம்பிக்கைகளில் நம்பிக்கையில்லாதவன் நான்.

நம்பிக்கைகளில் நம்பிக்கை வைப்பவன் இருகட்சி மனப்பான்மை உடையவனாகத்தான் இருப்பான். மூன்றுவது கோணத்தில் நின்று சிந்திக்கும் ஆற்றல் அவனுக்குஇருக்கமாட்டாது.

நம்பிக்கைகள்தான் மதங்களுக்கு அஸ்திவாரமாக இருந்து வருகின்றன. நம்பிக்கைகளில் நம்பிக்கையில்லாத காரணத்தால், நம்பிக்கைகளில் நம்பிக்கை வைக்கச் சொல்லும் மதங்களையும் நான் நம்புவது கிடையாது. மதங்களை மட்டுமன்றி கடவுளையும்நம்ப மறுக்கின்ற குணம் எனக்கு உண்டு. சிவபெருமான், பிள்ளையார், முருகன், திருமால் என்ற தெய்வத் திருப்பெயர்கள்கூட எனது உள்ளத்தில் புனிதமாமான உணர்ச்சியையும், பக்தி உணர்வையும் எழுப்ப மறுத்தே வருகின்றன.

இப்படியிருந்தபோதிலுங்கூட நான் சைவ சமயத்திலேதான் இருக்க விரும்புகின்றேன். சைவசமயத்தை மிக மிக நேசிக்கிறேன். சமய நம்பிக்கைகளை ஏற்க மறுத்த பின்னருங்கூட அந்த மதத்திலேயே இருக்கக்கூடிய வாய்ப்பை சைவசமயம் மட்டுமே தருகின்றது. சைவசமயத்திலுள்ள எனக்குப் பிடித்த அம்சங்களுள் இதுவுமொன்ருகும்.

'கட்டுப்பாடிலாமை'யும், 'முரண்பாடு'களும் சைவசமயத்தின் சிறப்பான அம்சங்களாகும்.

ஒருருவம், ஒரு வண்ணம் இல்லாத பரம்பொருளை பல வடிவங்களில் வணங்குகின்ற தன்மையும் 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் கோயில்களில் கண்ணப்பநாயனரது கதை காலட்சேபம் செய்யப்படும் முறையும், பன்றிக்குட்டிகளுக்குத் தாயாக மாறிப் பால் கொடுத்த பரமசிவன் அடியார் ஒருவரிடத்தில் பிள்ளைக்கறி கேட்டார் என்று பழங்கதை வழங்குவதும், இன்ன பிறவும் சைவசமயத்திலுள்ள 'முரண்பாடு'களைச் சுட்டிக்காட்டுகின்றன.

'நீ தெய்வமா அன்றி நான் தெய்வமா?' என்று புரட்சிக்குரல் கொடுக்கும் இளைஞர்கள் சைவ சமயத்திலேயே தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படுவதும், காலத்துக்கும் தக்கபடி கோயில்களில் நடைபெறும் வழிபாட்டுமுறைகள் மாறுபடுவதும் சைவசமயத்திலுள்ள 'கட்டுப்பாடின்மை'யைச் சுட்டி நிற்கின்றன.

புதிய ஆராய்ச்சிகளுக்கும், விமர்சனங்களுக்கும் இடந்தருகின்ற காரணத்தினுல்தான் ஜனநாயக அரசியலை மக்கள் விரும்புகின்ருர்கள். பல்வேறு ஆராய்ச்சிகளுக்கும், விமர்சனங்களுக்கும் ஜனநாயகம் இடந்தருவதுபோலவே சைவ சமயமும் இடந்தருகின்றது.

பொதுவாக, எத்துறையிலாயினும், 'கட்டுப்பாடின்மை'யும், 'முரண்பாடு'ம்தான் புதிய சிந்தனைகளுக்கு வழி வகுக்கின்றன என்பதோடு மனிதனைச் சுதந்திரமுடையவனுகவும் ஆக்குகின்றன. ஒரு மனிதனுக்கு முதலில் வேண்டுவது சுதந்திரம்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

—மூன்ரும் பேர்வழி.

தேர்தலுக்குத் தேர்தல் மக்களைப் பிரித்து வெறிகொள்ளச் செய்கிற

# கட்சி அரசியல் முறை அவ

மக்களிடையே உள்ள பிரிவுகள் பெரும்பாலும் அவர்களுக்கிடையில் பகைமை உணர்வை வளர்க்கவே பெரிதும் துணை செய்கின்றன. நாடு, மொழி, இனம், சமயம், சாதி என்ற பல பெயர்களால் மானிட சமுதாயம் முழுவதுமே பற்பல கூறுகளாகப் பிளவு பட்டு நிற்கின்றது. பிளவுகளும் பிரிவுகளும் முன்னேற்றத்திற்குப் பெரிதும் முட்டுக் கட்டையானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. நாட்டுப் பற்றின் காரணமாக எழுந்த போர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவை. ஒருநாட்டின் மீது போர் தொடுத்து விட்டான் என்று தெரிந்ததும், நீதி நியாயங்களை ஆராயாது, கண்மூடித் தனமாகத் தங்கள் நாட்டுத் தலைவனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்று தொல்லைகளில் அகப்பட்டுச் சிக்கித் தவித்த மக்களின் செய்திகளை வரலாற்று ஏடுகள் நமக்குக் காட்டுகின்றன.

### சமயச் சண்டைகளும் சாதிச் சண்டைகளும்

எல்லா மதங்களும் ஒரே இறைவனை அடைவதற்கான வழியையே காட்டுகின்றன என்ற உண்மையை உணராது மாறுபட்டு நின்றதன் காரணமாக விளைந்த சிக்கல்களும் கணக்கிலடங்காதவையாகும். சைவ, வைஷ்ணவ சண்டைகள், சைவர்களும் வைஷ்ணவர்களும் ஒன்ருகச் சேர்ந்து புத்தரோடும் சமணரோடும் பொருதியமை, இந்து முஸ்லீம் கலவரங்கள், முஸ்லீம் கிறிஸ்தவர் சண்டைகள், குருதிப் போர்கள் என்ற இவையெல்லாம் மதப் பிரிவுகளின் காரணமாக எழுந்த வீண் சண்டைகளேயாகும்.

இச்சண்டைகளின் போது மடிந்த உயிர்களின் எண்ணிக்கையும், நேர்ந்த பொருள்இழப்பும் எத்தனை எத்தனையோ!

இதுபோலவே சாதிப்பிரிவினை காரணமாகவும் பல தொல்லைகள் விளைந்திருக்கின்றன. வருணுசிரம தர்மத்தின் காரணமாக மனிதராகப் பிறந்தவருக்கிடையே வீண் பாகுபாடுகள் காட்டப்பட்டன. மேல்சாதி, கீழ்சாதி என்ற முறையில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுத்தப் பட்டன. சமுதாயச் சிக்கல்களை மேலும் மேலும் அதிகப்படுத்தவே சாதிப் பிரிவினையும் துணை செய்தது.

### மொழி இனச் சண்டைகள்

மொழி, இனம் என்பன ஓரளவுக்குத் தவிர்க்கமுடியாத பிரிவுகள் என்பது உண்மைதான் என்ருலும், அவற்றின் பயனுகவுங்கூடச் சமுதாயச் சிக்கல்கள் வளர்வதையும், சுபிட்சமான முன்னேற்றம் தடைப்படுவதையும் நம்மால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஆரிய திராவிடப் பிரச்சனைகளும், தமிழ் சிங்கள கலவரங்களும், யூதர்களுக்கு எதிரான வெறுப்புமிக்கதுஷ்பிரச்சாரமும் இத்தகைய பிரிவுகளினுலேயேயே ஏற்பட்டன. இவற்றின் பயனுக ஏகப்பட்ட பொருள்கள் நாசப்படுத்தப் பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான உயிர்களும் பலிகொள்ளப் பட்டன.

### அறிஞர்கள் பிரசாரமும் புதிய வழிகளும்

ஆனுல் சமீப காலமாக அறிஞர்கள் பலரின் இடைவிடாத ஆக்க முயற்சிகளின் காரணமாக இத்தகைய பிரிவினைத் தொல்லைகள் மறைந்து வருவதை நாம் காண்கிருேம். உலகம் முழுவதும் ஒரே குடும்பமாக வாழக்கூடிய சூழல் ஒருகாலத்தில் வந்தே தீரும் என்று நம்பக்கூடிய அளவுக்கு அறிஞர்களின் ஆக்க முயற்சிகள் பலன் தந்து வருகின்றன. சாதிப் பிரச்சனை சிறுகச் சிறுக மங்கி மறைந்து வருவதை நாம்காணக்கூடியதாக இருக்கின்றது. அதுபோலவே 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' என்ற தத்துவமும், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற கொள்கையும் உலகமெங்கணும் சிறுகச் சிறுகப் பரவி வருவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பிரிவினைகள் மறைந்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியேயாகும்.

### ஜனநாயகத்தின் பெயரால் புதிய தொல்லை

சண்டை சச்சரவுகள் குறைவதற்கும், உலகில் அமைதி நிலைபெறுவதற்கும் ஜனநாயகம்தான் சிறந்த அரசியல் முறை என்று அறிஞர் பலரும் கருதுகின்ருர்கள். ஆனுல் பழைய பிரிவினைச் சக்திகளைப்போலவே புதியதொரு சங்கடமும் ஜனநாயக அரசியல் முறையில் வளர்ந்து வருவது நமக்கெல்லாம் தெளிவாகத் தெரியாமலேதான் இருந்து வருகின்றது.

கட்சி அரசியல் முறைதான் ஜனநாயக அரசியலின் அடிப்படை என்று பலரும் எழுதியும் பேசியும் வருகின்ருர்கள். ஆனுல், சமீபகாலமாக பல நாடுகளிலும் நடைபெற்றுவரும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் அவதானிக்கும்போது கட்சி அரசியல் முறை அவ்வளவு தூரம் சிறந்ததா என்பதைச் சிறிது சிந்தித்துத்தான் முடிவுகட்டவேண்டியுள்ளது. கட்சிமுறை அரசியல் நாட்டிலுள்ள மக்களுக்கிடையில் புதியதொரு வடிவத்தில் பிரிவினை விதையை விதைக்கின்றதென்றே கொள்ளவேண்டியுள்ளது.

### கட்சி அரசியல்

கட்சி அரசியல் முறை நாட்டில் வேருன்ற வேருன்ற மக்களிடையேயுள்ள பிளவுகளும் அதிகமாகிக்கொண்டே வருகின்றன. ஒரு கட்சியின் உறுப்பினரை மற்ருெரு கட்சியின் உறுப்பினர் தமக்கு வேண்டாத ஒருவராகவே பாவிக்கின்ருர். அவர்களுக்கிடையில் இருக்கும் உறவும் வெறும் உதட்டளவிலேயே இருக்கின்றது. தேர்தல் காலங்களில் இந்தப் பகைமை இன்னும் பலமாக வளருகின்றது. கட்சி உறுப்பினர் ஒருவர் நடுவு நிலைமையில் நின்று சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவராகவே இருக்கின்ருர். நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து கொள்ளும் ஆற்றலை அவர் பயன்படுத்த முடியாதவராகின்ருர். கண்மூடித்தனமாக, பிழை சரி நோக்காது, கட்சியின் முடிவுப்படியே அவரும்நடக்கவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகின்றது.

தேர்தல்காலங்களிலும் செல்வாக்கான கட்சியைச் சார்ந்து நிற்கின்ற காரணத்தால் படிப்பறிவோ திறமையோ இல்லாத பலரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு நாடாளும் பதவிக்கு வந்துவிடுகிருர்கள். இதன் பயனுக திறமையுள்ளவர்கள் பாராளுமன்றத்துக்குச் செல்ல வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது.

கட்சித்தலைவர்களும்கூட சில சமயங்களில் உண்மையைத் தெளிவுறத் தெரிந்துகொண்டிருக்கின்றபோதிலும் தாங்கள் உண்மையைச் சொன்னுல் மாற்றுக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்துவிடும் என்ற காரணத்துக்காக பொய்சொல்லிப் பிரச்சாரம் செய்யவேண்டிய நிலைமைக்கே ஆளாகின்ருர்கள்.

ஒவ்வொரு வாசகரும் கடந்த தேர்தல் காலத்தையும், அத்தேர்தல்காலத்தின்போதும் அதற்குப்பின்னரும் சில நாட்களுக்கும் தங்கள் தங்கள் ஊரில் நடைபெற்ற அமளி துமளிகளைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தார்களானுல் கட்சி முறை அரசியலின் சீர்கேட்டை நன்ருக விளங்கிக்கொள்ளலாம்.

### கட்சிச் சடங்குகள்.

சமயத்தின் பெயரால் நாட்டு மக்களிடையே பல சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் தோன்றியது போலவே கட்சிகளின் பெயராலும் பல வீண் சடங்குகள் உருவாக்கப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். அலங்காரங்கள் செய்து கொடிகள் கட்டிக் கூட்டங்கள் நடத்துவதும், ஆடம்பரமான ஊர்வலங்கள் நடத்துவதும், 'வாழ்க' 'வீழ்க' என்பன போன்ற வீண் கோஷங்கள்'போடுவதும், கண்மூடித்தனமாக கட்சி நிதிக்குக் காசு கொடுப்பதும் நமது வாழ்வில் முளைவிட்டுள்ள புதிய சடங்குகளாகும்.

கட்சித் தலைவரை ஒரு வீர புருஷராகவே கருதும் பழக்கமும் படிப்படியாக வந்துகொண்டிருக்கிறது. கட்சித் தலைவர்களது பேச்சாலும், நடத்தையாலும், பெருத்த பிரச்சாரத்தாலும் அவர்கள் செய்வன யாவும் சரியென்ற பிரமை சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படுகின்றது. இந்தப் பிரமையைச் செ

—என். எம். பெரைராவும்—

### சிறிமா பண்டாரநாயக்காவும்

இலங்கையில் உள்ள அரசியல் கற்ற அறிஞர்களுள் முதல்வர் டாக்டர் என். எம். பெரைராதான் என்பதை அவருடைய அரசியல் எதிரிகளும்கூட ஒப்புக்கொள்வர்.

திரு. பண்டாரநாயக்காவின் மறைவின் மூலம் அரசியல் அரிச்சுவடி படிக்க முன்வந்தவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா என்பதை சின்னக் குழந்தைகளும் அறியும்.

இருந்தும் என்ன......

இன்று சிறிமாபிரதமராயிருக்கிருர்; பெரைரா செல்லாக் காசாக இருக்கிருர்.

செல்வாக்கான கட்சியின் தலைவியானபடியால் சிறிமாவால் பிரதமராக முடிந்தது. கட்சிச் செல்வாக்கின்மையால் படிப்பறிவுள்ள பெரைராவின் சேவை நமக்குக் கிடைக்கவில்லை.

இது ஒன்றே போதும், கட்சிமுறை அரசியலின் சீர்கேட்டை விளக்க!

# ...து வெறிகொள்ளச் செய்கிறதே, இந்த - ...முறை அவசியந்தானா?

...ும். உலகம் மு
...நடும்பமாக வா
...ஒருகாலத்தில்
...ன்று நம்பக்கூடி
...றிஞர்களின் ஆ
...பலன் தந்து
...திப் பிரச்சனை
...ங்கி மறைந்து
...ாணக்கூடியதா
... அதுபோலவே
...ருவனே தேவ
...த்துவமும், 'யா
...வரும் கேளிர்'
...யும், உலகமெ
...சிறுகுப் பரவி
...ம் காணக்கூடி
...றது. இந்தப்
...றந்து வருவது
...நிகழ்ச்சியேயா

### ...பெயரால்

...ரவுகள் குறை
...ில் அமைதி
...ம் ஜனநாய
... அரசியல் மு
...ர் பலரும் கரு
...ஆனால் பழைய
...ளைப்போலவே
...கடமும் ஜன
...முறையில் வள
...மக்கெல்லாம்
...ரியாமலேதா
...ன்றது.
...முறைதான்
...லின் அடிப்ப
...ம் எழுதியும்
...ரர்கள். ஆனா
... பல நாடுக
...றுவரும் பல்
...யும் அவதா
...ட்சி அரசியல்
...தூரம் சிறந்த
...றிது சிந்தித்
...ட்டவேண்டி
...றை அரசியல்
...க்களுக்கிடை
... வடிவத்தில்
...விதைக்கின்
...ள்ளவேண்டி

...முறை நாட்
...ருன்ற மக்க
...பிளவுகளும்
...டே வருகி
...பின் உறுப்பி
...கட்சியின் உ
... வேண்டாத
...விக்கின்றார்.
...ல் இருக்கும்
...உதட்டளவி
...து. தேர்தல்
...ப் பகைமை
...வளருகின்ற
...னர் ஒருவர்
...நின்று சிந்தி
...லாதவராக

வே இருக்கின்றார். நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து கொள்ளும் ஆற்றலை அவர் பயன்படுத்த முடியாதவராகின்றார். கண்மூடித்தனமாக, பிழை சரி நோக்காது, கட்சியின் முடிவுப்படியே அவரும் நடக்கவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகின்றது.

தேர்தல்காலங்களிலும் செல்வாக்கான கட்சியைச் சார்ந்து நிற்கின்ற காரணத்தால் படிப்பறிவோ திறமையோ இல்லாத பலரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு நாடாளும் பதவிக்கு வந்துவிடுகிறார்கள். இதன் பயனாக திறமையுள்ளவர்கள் பாராளுமன்றத்துக்குச் செல்ல வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது.

கட்சித்தலைவர்களும்கூட சில சமயங்களில் உண்மையைத் தெளிவுறத் தெரிந்துகொண்டிருக்கின்றபோதிலும் தாங்கள் உண்மையைச் சொன்னால் மாற்றுக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்துவிடும் என்ற காரணத்துக்காக பொய்சொல்லிப் பிரச்சாரம் செய்யவேண்டிய நிலைமைக்கே ஆளாகின்றார்கள்.

ஒவ்வொரு வாசகரும் கடந்த தேர்தல் காலத்தையும், அத்தேர்தல்காலத்தின்போதும் அதற்குப்பின்னரும் சில நாட்களுக்கும் தங்கள் தங்கள் ஊரில் நடைபெற்ற அமளி துமளிகளைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தார்களானால் கட்சி முறை அரசியலின் சீர்கேட்டை நன்றாக விளங்கிக்கொள்ளலாம்.

### கட்சிச் சடங்குகள்.

சமயத்தின் பெயரால் நாட்டு மக்களிடையே பல சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் தோன்றியது போலவே கட்சிகளின் பெயராலும் பல வீண் சடங்குகள் உருவாக்கப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அலங்காரங்கள் செய்து கொடிகள் கட்டிக் கூட்டங்கள் நடத்துவதும், ஆடம்பரமான ஊர்வலங்கள் நடத்துவதும், 'வாழ்க' 'வீழ்க' என்பன போன்ற வீண் கோஷங்கள்' போடுவதும், கண்மூடித்தனமாக கட்சி நிதிக்குக் காசு கொடுப்பதும் நமது வாழ்வில் முளைவிட்டுள்ள புதிய சடங்குகளாகும்.

கட்சித் தலைவரை ஒரு வீர புருஷராகவே கருதும் பழக்கமும் படிப்படியாக வந்துகொண்டிருக்கிறது. கட்சித் தலைவர்களது பேச்சாலும், நடத்தையாலும், பெருத்த பிரச்சாரத்தாலும் அவர்கள் செய்வன யாவும் சரியென்ற பிரமை சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படுகின்றது. இந்தப் பிரமையைச் செவ்வனே பயன்படுத்திக்கொண்டு பல தலைவர்கள் கட்சி நடத்தியே தங்கள் வயிற்றுப்பிழைப்பையும் நடத்திவிடுகிறார்கள், ஏமாந்து நிற்பவர்கள் சாதாரண பொதுமக்கள்தான்.

### கட்சியின் பலம்:

கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் மேற்கொண்டு கட்சித் தலைவர்களது சொற்களுக்குத் தலையாட்டுகின்றவர்கள்தான் தொடர்ந்து ஒரேகட்சியிலேயே இருக்கமுடியும். இல்லாவிட்டால் பிணக்குகள் வந்தேதீரும். சாதாரணமாகசுதந்திரசிந்தனையும் அறிவும் இருக்கின்ற இடத்தில் ஒத்துப்போகின்ற தன்மையும் குறைவாகவே இருக்கும். அவர்களுடைய புதிய கருத்துக்கள் கட்சித்தலைவரது கருத்துக்குமாறாக இருப்பதோடு அவர்களும் கட்சித் தலைவரது சொல்லுக்குக் கீழ்ப்படிய முடியாதவர்களாகவே இருப்பார்கள். இந்த நிலைமையில் சுதந்திர சிந்தனையும் அறிவும் உள்ளவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்து நிற்கமுடியாது தனித்தே நிற்க வேண்டிநேரிடுகிறது. அவர்கள் தேர்தல்முதலியவற்றில்கலந்து கொள்வதென்றால் பணபலமும் ஆள்பலமும், அமைப்புச்சிறப்பும் கொண்ட கட்சிகளுடனேயே மோதவேண்டி நேரிடுகிறது. தனியொரு மனிதன் இத்தனை சக்திகளையும் வெல்வது எங்ஙனம்? அதன்பயனாக அவரது திறமைகள் பொதுமக்களுக்குக் கிடைக்காமலே போய்விடுகின்றன!

### கட்சி இல்லாமல் முடியாதா?

ஒவ்வொரு கிராமத்தையும் பரிபாலித்து வரும் கிராமச் சங்கங்கள் கட்சி முறையில் செயல்படவில்லை. இருந்தும் கிராமச் சங்கத் தேர்தல்களும், அலுவல்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. பல ஆஸ்பத்திரிகளும், ஐக்கிய நாணய சங்கங்களும், சங்கக் கடைகளும், பல பள்ளிக்கூடங்களும், வேறு பல தர்ம ஸ்தாபனங்களும் ஒரு கூட்டத்தினரால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிறு குழுவினராலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் நிர்வாகத்தின்போதோ, தெரிவின்போதோ நாம் கட்சிமுறையைப் புகுத்தியது கிடையாது.அப்படியிருந்தும் கூட இவற்றின் நிர்வாகமெல்லாம் மிக நேர்த்தியான முறையிலேயே நடைபெற்று வருகின்றன. இவற்றின் முறையை மாற்றவேண்டுமென்றோ அல்லது இங்கும் கட்சி முறையைப் புகுத்தவேண்டுமென்றோ யாரும் கூற முன்வரவில்லை, அப்படியிருக்கும்போது பாராளுமன்றத்துக்கு மட்டும் கட்சி அடிப்படையில் நாம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை!

—"சுகுமாரன்"

## ராசிக் பரீதும், டாக்டர் சில்வாவும்

பல கட்சிமாறுவதில் நிபுணர் ராசிக்பரீது. அவர் சென்ற தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராகத் தேர்தலில் போட்டியிட்டமையால்தான் வெற்றிபெற முடிந்தது.

தேர்தலில்வெற்றிபெற வேண்டுமென்பதையே இலட்சியமாகக் கொண்டு கட்சிகளில் சேருபவர்களுக்கு நமது நாட்டில் பஞ்சமில்லை!

டபிள்யூ டி. சில்வா நெடுங்காலமாக சுதந்திரக்கட்சி உறுப்பினர். இருந்தும்கூட அவருடைய அபிப்பிராயத்தை அவர் வெளியிட முன்வந்தபோது கட்சியை விட்டே வெளியேற்றப் பட்டுவிட்டார். வரிகளை எதிர்த்துக் குரல் எழுப்பியதும் அவரைச் சுதந்திரக் கட்சி வெளியே தள்ளிவிட்டது!

உறுப்பினரின் சுதந்திரத்தைக் கட்சிகள் மட்டந்தட்டிவிடுகின்றன. சிலசந்தர்ப்பங்களில் தன்னுடைய சொந்த மனச் சாட்சியைக் கொன்றுவிட்டால்தான் ஒருவன் கட்சிக்குள் நிலைக்க முடிகிறது. இல்லாவிட்டால் வெளியேற வேண்டியதுதான்!

# தெரிந்ததா?

கி. பாக்கியலட்சுமி, கண்டி.

கேள்வி: 'ப' வில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு டைரக்டரை உங்களுக்குத் தெரியுமா?

பதில்: நன்றாகத் தெரியும். சந்தர்ப்பம் வரும்பொழுது "சினிமாப் புதினத்தில்" எழுதுவேன்; 'புதின'த்தை கிழமைதோறும் படித்து வருவீர்களாயின், அதைப் படிக்கத்தானே செய்வீர்கள்!

த. கணேசன் பருத்தித்துறை

கே: 'சிறுபான்மைத் தமிழர்' என்ற பெயரில் ஒரு சங்கம் இருப்பது அவர்களுக்கே இழுக்கல்லவா?

ப: சமூகத்தின் கீழ் நிலையிலுள்ள வகுப்பினருடைய நலன்களைப் பேணி, அவர்களை முன்னேற்றுவதற்காக அந்தப் பெயரில் ஒரு இயக்கம் இருப்பது தவறல்ல; ஆனால் அப்படியான சங்கங்களின் பெயரைத் தங்களுடைய சொந்த முன்னேற்றத்துக்குச் சிலர் உபயோகிக்க நினைப்பதுதான் இழுக்கு!

அறிவழகன், தெரணியகல.

கே: ஓர் ஆடவனைக் கண்டதும் ஒரு பெண் மரத்தையோ தூணையோ கட்டிப் பிடித்தால் அதன் கருத்தென்ன?

ப: 'மலர்ந்த மலர்க்கொடி' பற்றிப்படரக் கொழுகொம்பை நாடுகின்றது' என நினைத்துவிடாதேயும். ஆடவர் கண்களிலுள்ள விஷத்தைத் தாங்காமல் ஓடி மறைவதற்காக அவள் மரத்தையோ தூணையோ நாடியிருக்கலாம்.

கே: "தேசிங்குராஜா" என்ற பெயரில் ஏற்கனவே ஒரு படம் வந்திருக்கிறது. எந்த ஆண்டில் என்பதை உங்களால் சொல்ல முடியுமா?

ப: என்ன பரீட்சை நடத்துகிறீர்களோ? 1936-ம் ஆண்டு அப்படி ஒரு படம் வெளிவந்தது! இப்பொழுது திருப்திதானே!

கேள்விப்பித்தன், கண்டி.

கே: 'நள்ளிர'வுக்குவிளக்கம் தேவை.

ப: "நள்ளிரவு என்பது அன்பான மனைவியின் அணைப்பிலே கட்டுண்டு இந்தச் சுவையற்ற உலகிலிருந்து விடுபட்டிருக்கும் பொன்னானவேளை". என்கிறார் காண்டேகர்.

சி. கிருஷ்ணன் நெல்லியடி

கே: சினிமா நடிகைகளை மணம்செய்து கொண்டால் சொகுசான வாழ்க்கை நடத்தலாமல்லவா?

ப: அது அந்தப் 'பரமசிவ'த்துக்குத்தான் தெரியும்.

டி.மின்னொளி, புலோலி.

கே: வழுக்கிவிழுந்த வனிதையர்க்கு வாழ்வே இல்லையா?

ப: ஏனில்லை, துணிவுள்ள வாலிபர்கள் முன்வரவேண்டும்!

ம. தனபால், கொழும்பு.

கே: நடிகவேள் எம். ஆர் ராதா சினிமா ஒழியவேண்டும் என்கிறாராமே?

ப: யார் அப்படிச் சொன்னது? அவர் சொல்வதெல்லாம் சினிமாக்களில் வரும் ஆபாசக் காட்சிகளைத்தான் ஒழிக்கவேண்டுமென்று. அவர்கூறியதைப் புரிந்து கொள்ளாவிட்டால் அது அவரின் தவறல்லவே.

மங்களேஸ், வெள்ளவத்தை

கே: அதிர்ஷ்டம் என்றால் என்ன?

ப: திறமையற்றவர்களுக்குப் பயன் படும் ஏணி.

எஸ். ஏ. இராமலிங்கம், லுணுகலை.

கே: யாழ்ப்பாணம் பனங்கிழங்குக்கும் ஈராக் ஈச்சம்பழத்துக்கும் உள்ள வித்தியாசமென்ன? எது மக்களுக்குத்தேவை.

ப: வித்தியாசம்: ஒன்று கிழங்கு, மற்றது பழம். ஒடியற்பிட்டு உடம்புக்கும் நல்லது, பசியையும் போக்கும்.

எஸ். எம். இரத்தினம், லுணுகலை.

கே: சேற்றிலே வளரும் செந்தாமரைக்கும் வீட்டிலே வளரும் கன்னிப்பெண்ணுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: சேற்றிலே வளரும் செந்தாமரையில் தேனெடுக்க வரும்வண்டு, சீதனம் கேட்பதில்லை!

மதியமுதன், மட்டக்களப்பு.

கே: காதலில் வெற்றி பெற்றவர்கள் கூடவா தோல்வியுற்றவர்கள் கூடவா?

ப: காதலின் குறிக்கோள் கலியாணந்தானென்றால் தோல்வியுற்றவர்கள் தான் அதிகம்.

கே: உலகிலே சாதிக்கமுடியாத புதினம் ஏதுமுண்டா?

ப: இயற்கை அமைத்த மனிதயந்திரம் நூறுவருடங்கள் நிற்காமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது சாதிக்க முடியாத புதினமல்லவா?

''மனோ''

# இனக்கவர்ச்சி திரவத்தை வெளிப்படுத்தி

## பூச்சி புழுக்களை அழிக்க முயற்சி!

மனிதவர்க்க நலனுக்காக விஞ்ஞானிகள் எவ்வளவோ புதுப்புதுக் கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து வருகின்றனர். பலவித நோய்களுக்குக் காரணமாகவுள்ள புழு பூச்சிகளை அவைகளின் இனக் கவர்ச்சி முறையை உபயோகித்தே வரச்செய்து அவைகளை ஒழித்துக் கட்ட விஞ்ஞானிகள்வழிகண்டுபிடித்திருக்கின்றனர். நவீனவாழ்க்கைக்கு தற்கால விஞ்

''நோபல்'' பரிசு பெற்ற ஜெர்மன் ரசாயனநிபுணரும்மூனிச்பேராசிரியருமான திரு. புடெனன்ட் பட்டுப்பூச்சி ரகம் ஒன்றைக்கொண்டு நடத்திய ஆராய்ச்சி விவரத்தை இம் மகாநாட்டில்வெளியிட்டார். சுமார் 20வருடகாலத்தில் சுமார் 5, 00, 000 பெண் பூச்சிகளைப் பிடித்து அவைகளிடமிருந்து, ஆண் பூச்சிகளைக் கவர்ச்சிப்பதற்காக வெளிப்படும் வாசனைத் திரவத்

முறையில் தயாரிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். இந்த வாசனைத் திரவத்தைக் கொண்டு ஆண் ரகங்களை மயங்கச் செய்து அவைகளை அழித்துவிடுவதே இம்முயற்சியின் நோக்கமாகும். காலரா, மலேரியா, முதலிய வியாதிகள் ஏற்படக்காரணமாக உள்ள புழு, பூச்சிகளைஇம்முறையில்எளிதில் ஒழித்துக்கட்டிவிடலாம்.

''நோபல்'' பரிசுபெற்ற மற்றொரு விஞ்ஞானியான பேராசிரியர் ஸ்டான்லி

# தொற்று நோய்களைத் தவிர்க்க

## விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பு

ஞானம் எவ்வளவோ விதத்தில் பயன்பட்டு வருகிறது. தென் ஜெர்மனியில் கூடிய ''நோபல்'' பரிசு பெற்ற ரசாயன நிபுணர்கள் மகாநாட்டில் விஞ்ஞானப் புதுமைகள் சில வெளியாயின. அவைகளில் இரண்டொரு விஷயம்மிக முக்கியமானதாகத் தென்படாவிட்டாலும் மனித வாழ்க்கை அதனால் எவ்வளவு தூரம் பயனடைய முடியும் என்பதை அறிய ஆச்சரியமே ஏற்படும்.

தை வெளிப்படுத்தி சேகரித்தார். ஒரு பூச்சியினிடமிருந்து கிடைக்கும் இத்திரவத்தின் அளவு கண்ணுக்கே தெரியாதபடி இருக்குமென்றாலும் அதே வாசனையுள்ள திரவத்தைச் செயற்கை முறையில் தயாரிக்கும் வழியை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துவிட்டனர்.

இப்போது ஒவ்வொரு ரகப்பூச்சிகளின் இத்தகைய இனக்கவர்ச்சி வாசனைத் திரவத்தை செயற்கை

என்ற அமெரிக்கர் கிருமிகளைஆராய்ந்து அவைகளை ஒழித்துக் கட்டுவதற்கான ஆராய்ச்சிகளை நடத்தி வெற்றி பெற்றிருக்கிறார். இக்கிருமிகள் மனிதவர்க்கத்திற்கு தீங்கு இழைக்காமல் இருப்பதற்கான வழி இவர் ஆராய்ச்சியின் பலனாக ஏற்பட்டுவிட்டது. விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனாக இம்மாதிரி எவ்வளவோ நன்மைகள் மனிதவர்க்கத்தினருக்கு ஏற்பட்டுவருகின்றன.

# விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற ரயில் அம்புலன்ஸ்

## 60 மைல் வேகத்தில் ஆடாமல் செல்லலாம்!

விபத்துக்குள்ளானவர்களுக்கு எவ்வளவு சீக்கிரம் சிகிச்சை கிடைக்க வழி செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சில உயிர்களைக் கட்டாயம் பிழைக்க வைக்கலாம். இதை மனதில் கொண்டு மேற்கு ஜெர்மனியில் ரயில்வண்டி ஆம்புலென்ஸ் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

விபத்திற்குள்ளானவர்களை மோட்டாரில் கொண்டு செல்வதைவிட இன்னும் துரிதமாகவும் ஆடாமலும் அசங்காமலும் ரயில்வண்டி மூலம் கொண்டு செல்லலாம். இதை மனதில் கொண்டு மேற்குஜெர்மனி ஸ்தாபனம் ஒன்று ரயில் வண்டி ஆம்புலன்ஸ் பெட்டியைத்தயாரித்துள்ளது.

இந்த ஆம்புலன்ஸ் பல நாடுகளில் பரிசோதிக்கப்பட்டது. முக்கியமாக, பாகிஸ்தான், கிழக்கு ஆபிரிக்கா, மத்திய அமெரிக்கா இம்மூன்று நாடுகளிலும் பரீட்சிக்கப்பட்டு இது மிக உபயோககரமாக இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

விபத்துக்குள்ளானவர்கள், அவசர வைத்திய சிகிச்சைபெறும் நிலையிலுள்ள நோயாளிகள் ஆகியவர்களை வெகு தூரத்திலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் இதனால் எளிதில் கொண்டுபோய் சேர்த்துவிடமுடிகிறது. மணிக்கு 60 மைல் வேகம் செல்லக்கூடிய இந்த ரெயில் அம்புலன்ஸில் முதல் உதவி அளிப்பதற்கான சாதனங்கள், மருந்துகள் வைக்கப்பட்டுள்ளன.

## மறந்து போச்சே!

ஒரு வங்கியில் ஆறு பேர் மட்டும்வேலை செய்துகொண்டிருந்தனர். திடீரென்று ஒருகொள்ளைக் கூட்டம் கைத்துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தது. அறுவரும் கையை மேலே தூக்கியபடி எழுந்து நின்றனர்.

அருகிலிருந்த டெலிபோன் கூண்டுக்குள் அறுவரையும் போட்டுப் பூட்டி விட்டு இரும்புப்பெட்டியை உடைத்து இருந்த பணத்தையெல்லாம் கொள்ளைக்கூட்டம் சூறையாடிக்கொண்டு போய் விட்டது.

கள்ளர்கள் போனபின் வெளியே வந்த ஆறு உத்யோகத்தர்களும் 'துவக்கோடு வத்தவர்கள் முன் நம்மால் என்ன செய்ய முடியும்' என்று வாதித்தார்கள். அந்த ஆறு பேரில் ஒருவன் பியோன். அவன் பயபக்தியோடு கூறினான். ''டெலிபோன் கூண்டுக்குள் அடைபட்டுக்கிடந்த அரைமணிநேரத்தில் பொலீசுக்கு டெலிபோன்செய்திருக்கலாம் சேர்... ....''

மற்றவர்கள் ''அடடா'' என்று வாயைப் பிளந்தார்கள்!

# தலையணை மந்திரம் ஓதிய மனைவி

## கணவன் விவாகரத்துச் செய்தான்

கணவன் குறட்டை விட்டான் தூங்கும்போது பாவம் அந்த மனைவியின் தூக்கம் கலைந்து விட்டது, அவ்வளவுதான் விவாகரத்துச் செய்துகொண்டாள், இதுநடந்ததுசிலமாதங்களுக்குமுன்.

ஏதாவது காரணத்துக்காக விவாகரத்துச் செய்யும் வழக்கம் இப்பொழுது மேல் நாடுகளில் மாறி விவாகரத்துச் செய்வதற்கு ஏதாவதுகாரணமிருக்கிறதா வென்று துருவித் துருவித் தேடும் யுகம் பிறந்துவிட்டது.

ஹொலிவூட் கணவனொருவன் சமீபத்தில் தனது பன்னிரண்டாவது மண விழாவைக் கொண்டாடும்போது தமாஷாக மனைவியைப் பிடித்து நீந்தி விளையாடும் தொட்டியில் தள்ளிவிட்டான். உடனே அவள் கோட்டுக்குப் போய் விவாகரத்துச் செய்துகொண்டாள், பாவம் அவள் பன்னிரண்டு வருடம் அவனோடு குடும்பம் நடத்திவிட்டதே பெரிய காரியமல்லவா?

இன்னொரு காதலர்களுக்குத் திருமணம் முடிந்துவிட்டது. முதலிரவில் கணவன் சேட்டைக் கழற்றினான். அவன் மார்பில் பழைய காதலிகளின் உருவப்படங்கள் பச்சை குற்றப்பட்டிருந்ததை மனைவி அப்போதுதான் கண்டாள். ஒருநாள் வாழ்வோடு அந்த மனைவி விவாகரத்துச் செய்து கொண்டாள்.

தான் பேசுவதை அக்கறையோடு கணவன் கேட்பதில்லை யென்று டெக்ஸாஸ் கோர்ட்டில் ஒரு மனைவி விவாகரத்து வழக்குத் தொடர்ந்தாள். அவள் பசப்புவதைக் கேட்க முடியாதென்றான் கணவன். நீதிபதி விவாகரத்துக்கு அனுமதி வழங்கினார்.

மனைவியுடைய கூந்தலின் நிறம் அழகாயில்லை யென்று ஒரு கணவன் ஷெல்லாக் எண்ணெய்யை அவளது தலையில் ஊற்றினான். அவள் ஓடிச் சென்று நீதிபதிக்கு முறையிட்டாள். வழக்கை விசாத்ரிது விவாகரத்துக்கு அனுமதித்தார் நீதிபதி.

### எனக்குத்தான் வெற்றி!

பிரஞ்சு சினிமா நடிகர் ஒருவருக்கு ஒருநாள் ஒரு பெண்ணிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில்." தங்கள் கண் நிறம் என்ன? தயவு செய்து தெரிவியுங்கள்''என்று குறிப்பிட்டிருந்தாள் அந்தப் பெண்.

நடிகருக்குப் பெருமை தாங்க முடியவில்லை. ''நீலம்" என்று உடனே பதில் எழுதினார் அந்த நடிகர்.

சில நாளைக்கெல்லாம் அதே பெண்ணிடமிருந்து அவருக்கு மற்றொரு கடிதம் வந்தது. அதில், 'வந்தனம். தங்கள் கண் நிறம் என் நாயின் கண் நிறம் தான் என்று நான் சொன்னேன்; என்கணவர் இல்லை என்றார். தங்கள் பதிலால் நான் வெற்றிபெற்றேன்'' என்றிருந்தது.

### யானை பார்க்க வெள்ளெழுத்தா?

1796ம் ஆண்டு, கெப்டன் ஜேக்கப் கிரௌனிங்ஷீல்ட் என்பவர் முதன் முதலாக வங்காளத்திலிருந்து ஒரு யானையை அமெக்காவுக்குக் கொண்டு சென்றார். நியூயோக் நகரில், பீவர் அன் பிராட்வே என்ற வீதியில் ஒரு பெரிய மண்டபத்தை வாடகைக்கு எடுத்து, டிக்கெற்வைத்துப் பொதுஜனங்களுக்கு யானையைக் காட்டினார்.

தங்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காக, ஏதோ ஒரு பொருளால் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான பிராணி தான் அது என்று யானையைப் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்!




# பறவை, மிருகங்களுடன் மனிதனும் பேசலாம்!

விகடம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சங்கீத வாணி எம். எல். வசந்தகுமாரியின் கணவர். விகட வித்தையில் பிரபல்யமடைந்துள்ள இவரை நமது நிருபர் பேட்டி கண்டபோது பல சுவையான தகவல்களை வெளியிட்டார். இனிப் பேட்டியைப் படியுங்கள்.

"வணக்கம் கிருஷ்ணமூர்த்தி அவர்களே!"

"வணக்கம் சார்!"

"விகடவித்தை என்பது உண்மையிலேயே ஒரு சிறந்த கலை, எனவே, எங்கள் வாசகர்களின் சார்பாக உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமென்று நினைக்கிறேன்!"

"நினைப்பதென்ன? தாராளமாகக் கேளுங்கள்"

"தமிழ்நாட்டில் விகடக்கலை தற்போது முன்னேறிக் கொண்டிருக்கிறதா? அல்லது......"

"முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. என்றாலும், செத்துவிடவில்லை!"

"தமிழ் நாட்டில் திருவிசலூர் விகடம் ராமஸ்வாமி சாஸ்திரிகள்; 'விகடகேசரி' சந்தானம்—சந்துரு; இவர்களுடன் தாங்களும் இந்த விகடவித்தை செய்து வருகிறீர்கள். உங்களைத் தவிர இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா?"

"ஆமாம். நாராயண சாஸ்திரிகள் என்று ஒருவர் இருக்கிறார். இன்னும், 'நாங்களும் விகடம் செய்பவர்கள் தான்' என்று சொல்லிக் கொண்டு பலர் இருக்கிறார்கள். ஆனால்......"

"ஆனால்?"

"ஆனால், அவைகளெல்லாம் உண்மையிலேயே விகடங்கள் தானா என்பதுதான் சந்தேகம். தனி ஒரு மனிதன் பல ரசிகர்களை மகிழ்விப்பதுதான் சிறந்த விகடம். இருவரோ, மூவரோ சேர்ந்து கொண்டு 'ஏதாவது' செய்தால் அதை விகடமென்றே கூறமுடியாது. உதாரணமாக நீங்கள் முதலில் குறிப்பிட்ட சந்தானம்—சந்துரு இருவரும் என்னுடனேயே இருந்து, என்னோடு நன்றாகப் பழகியவர்கள். அவர்கள் செய்யும் விகடத்தை 'விகடம்' என்று என்னால் கூறமுடியாது!"

"விகடம் செய்யும் பொழுது பல ஆண்கள், பெண்கள், அசடு, சமர்த்து, பைத்தியம், மிருகம், பட்சி மாதிரி எத்தனையோ வகையாகச் செய்துகாட்ட வேண்டியிருக்கிறது. இந்த விகடங்களைச் செய்து காட்டுவதற்கு ஜலத்தில் உட்கார்ந்து கொண்டும்; மழையில் நனைந்துகொண்டும்; ஈரத் துணியைத் தலையில் போர்த்துக் கொண்டும் பற்பல விதமாக சாதகம் செய்ய வேண்டியிருக்கிறது, என்று ராமஸ்வாமி சாஸ்திரிகள் கூறுகிறாரே?"

"ஆமாம். இப்படிப் பலவிதமான சாதகங்கள் செய்பவர்களும் உண்டு. ஆனால் நான் அப்படி ஒன்றும் 'அசுர சாதகம்' செய்யவில்லை. இயற்கையாகவே அமையப் பெற்றது தான் இது!"

"அப்படியா? எத்தனை வருடங்களாக நீங்கள் இந்த விகடவித்தை செய்து வருகிறீர்கள்?"

"சுமார் ஐந்து, அல்லது ஆறுவயதிலிருந்தே இதை நான் செய்து வருகிறேன்!"

"நீங்கள் என்னென்ன விகடங்கள் செய்வீர்கள் என்று கூறமுடியுமா?"

"பல பேச்சாளர்களின் மேடைப்பிரசங்கங்களை, அவர்களைப்போல் பேசுவேன். பல வாத்தியக்கருவிகளைப் போல் வாயால் வாசித்துக் காண்பிப்பேன்; மிருகங்கள் பட்சிகளைப் போல் சப்திப்பேன்."

"விகடவித்தையில் தேர்ச்சி பெற்றவர்கள், மிருகங்களுடனும், பறவைகளுடனும் பேச முடியும் என்று கூறுகிறார்களே, இது உண்மையா?"

"ஆமாம், உண்மைதான், நான்கூட நாய்களுடன் சண்டைபோட்டிருக்கிறேன்! பலவிதமாக சாதகங்கள் செய்து, இந்தக்கலையை நன்கு பழகியவர்களுக்கு இது சாத்தியமே முன்காலத்தில் அரச சபையில் வைத்துக் குதிரையை அழைந்தும், போகச்சொல்லியும் வித்தைகள் செய்துகாட்டி அரசர்களையும், ஜனங்களையும் விகடவித்தை வல்லுனர்கள் மகிழ்வித்தார்கள்!"

"அப்படியானால், இந்த விகடவித்தை, சாதகம் செய்வதோடு, இயற்கையாகவும் அமைவதுண்டு என்று கூறுகிறீர்கள். அப்படித்தானே?"

"ஆமாம், எனக்கொரு மகன் இருக்கிறான், பெயர் சங்கர். அவனும்கூட என்னைப் போல் பலவிகடங்கள் செய்து காட்டுகிறான்! இதுவும் இயற்கையாக அமைந்ததுதான்."

"அதுசரி, நீங்கள் ஏதாவது படங்களில் நடித்திருக்கிறீர்களா?"

"ஆமாம் முன்பு நடித்திருக்கிறேன். பலகாலத்திற்கு முன் வெளிவந்த 'சம்சார நௌகா' என்ற படத்திலும், பிறகு, 'ஜாதகம்', 'கண்கள்', 'மூன்று பிள்ளைகள்' முதலிய படங்களிலும் நடித்திருக்கிறேன்!"

இலங்கை ரசிகர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது?......தன்மையுள்ள — நற்பண்புள்ள கலைஞர்கள் எத்தேசத்திலிருந்து வந்தாலும், அவர்களுக்கு நன்மதிப்புக் கொடுக்கத்தவறியதில்லை இந்த ஈழத்து அன்பர்கள்......!"



'எங்கள் அண்ணா' படத்தில் புதுமுகம் மீனகுமாரி.

## சினிமா உலகில் ஓர் 'குடை' வள்ளல்

கொடை வள்ளல்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் 'குடை வள்ளலை'ப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் தொடர்ந்து படியுங்கள்:

அன்று நல்லமழை வாஹினி ஸ்டூடியோவில் படப்பிடிப்பு, இடைவேளைக்காக நிறுத்தப்பட்டிருந்தது. அதில் பங்குகொண்டவர்கள் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். ஆனால் எப்படிப்போவது என்று திகைத்துக் கொடிருந்தார்கள். அவர்களுள் நடிகை ராஜசுலோசனாவும் ஒருவர். நேரமாகிக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்தப் பக்கமாக பின்னணிப் பாடகி லீலா குடையுடன் வந்துகொண்டிருந்தார். ராஜசுலோசனா மலைத்து நிற்பதைக் கண்டு அவருக்கு குடை கொடுத்துதவ முன்வந்தார் லீலா! அவர் குடை பிடிக்க, அதன் பாதுகாப்பில் சிறிதும் நனையாமால் சென்று தனது காரில் ஏறிக்கொண்ட ராஜசுலோசனா, லீலாவுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, "யார் யாரையோ வள்ளல் என்கிறார்களே, இதோ இன்று நீங்கள் தான் எனக்கு கொடை (அதாவது குடை) வள்ளல்" என்றார் ராஜசுலோசனா! இப்பொழுது யார் அந்த'குடைவள்ளல்' என்பதை தெரிந்துகொண்டீர்களல்லவா?

## சிங்கள நிருபருடன் ஆங்கில நடிகர் தமாஷ்!

சில ஆண்டுகளுக்குமுன்னர் 'க்வாய் நதிப்பாலம்' என்ற படப்பிடிப்பு சம்பந்தமாக, பிரசித்திபெற்ற ஆங்கில நடிகரான அலெக் கின்னெஸ் என்பவர் கொழும்புக்கு வந்து இறங்கினார்.

விமான நிலையத்தில் வைத்து அவரைப் பேட்டி காணச் சென்ற சிங்களப் பத்திரிகையின் நிருபர்ஒருவர் அவரிடம் சென்று, "நீங்கள்தானே பிரசித்தி பெற்ற நடிகர் கின்னெஸ்" என்று விசாரித்தார்.

"ஆமாம்" என்று தலையசைத்தார் நடிகர்.

"உங்கள் இங்கிலாந்து நாட்டின் 'ஏல்' 'ஸ்டௌட்' போன்ற மதுபானங்களுக்கு எங்கள் ஊரில் நல்ல கிராக்கி" என்றார் நிருபர்.

"உங்கள் இலங்கைத் தேநீருக்கு எங்கள் நாட்டில் நல்லகிராக்கி!" என்று குறும்பாகப் பதிலளித்தார் நடிகர். இந்த நிகழ்ச்சியை, 'கொலம்பியா நியூஸ் சர்வீஸ்' என்ற பத்திரிகைபிரமாதமாகப் பிரசுரித்திருந்தது!

தற்போது இலங்கைப் பத்திரிகைகளில் பக்கத்துக்குப் பக்கம் 'கசிப்பு' 'கசிப்பு' என்ற பெயரே கண்ணில் படும் இந்தக் காலத்தில் அப்படி ஒருநடிகர் இங்கு வந்தால், அவரிடம் சிங்கள நிருபர்கேட்ட அதே கேள்வியைத் திருப்பிக்கேட்டால்என்ன பதில் சொல்வாரோ?

## வரட்டுமே, வரி!

(இருபத்தைந்து ஏக்கருக்குமேல் பூமியுள்ளவர்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டும் என்று சட்டம் வரப்போவதை அறிந்த பண்டிதர் தம்பித்துரை, தமது சில்லறைக் கடையிலிருந்து இரவோடிரவாகத் தம் மனைவிக்கு எழுதிய கவிதைக்கடிதம்.)

அடியே கண்மணி
அன்னமே தேனே!
கடிகடி யென்று
கணத்து விழாதே
சொத்து சுதந்திரம்
தொலையுள பூமிகள்
விற்றும் வரிகளை
வென்றிடவொண்ணு (து)
மூத்தவனுக்கு
மூவா(று) ஏக்கரும்
இளையவனுக்கு
இருபதிற் குறையவும்
நடுப் பயலுக்கு
நாலுடன் ஐந்தும்
எழுதிக் கொடுத்தபின்
எஞ்சிய அறுபதில்
இருபதைக் கொடுப்போ
இளையவளுக்கு [ம்
வருமொரு நாற்பது
வரட்டுமே அதை நாம்
சரிசமமாகத்
தட்டுவோம் இருவரும்
அரசினர் வரிக்கு
ஆரிடம் கேட்பார்?
மூளையா எனக்கிலை
முற்றிப் பழுத்தது!
காளையில் என்குணம்
கண்டவ ரில்லை;
பாளையின் பாணி
பானையில் வடிந்ததும்
காலையா முன்னே
கண்ணிற் படாது
முட்டியும் இருக்கும்;
முடிச்சுகள் இருக்கும்;
கட்டிய பானையில்
கள்ளுதா விராது!
அத்தகை மனிதனை
அரசாங் கத்தினர்
ஒத்திகை பார்க்கிறார்
உனக்கே தெரியுமே!
எதற்கும் தயாராய்
இருந்திடு வருகிறேன்
எழுத்திலே எல்லாம்
இருத்த லாகாது
வருகிறேன் கண்மணி
வருகிற வாரம்!
மற்றவை நேரில்
வந்து சொல்கிறேன்!

—நிமிலை மகாலிங்கம்.

# கண்டதும்... கேட்டதும்...

### எந்தத் தமிழில் எழுதினலென்ன?

அடுத்தவீட்டு அம்பிப் பயல், கையில் பட்டமும் முகத்தில் கவலையுமாக வந்நான். ''அம்பியாவது பட்டமாவது. நம்ம பாஷையில் சொல்லித் தொலையேன் அம்மாமித் தமிழில் ஏன் அழுது வடிக்கிறீர்'' என்று வாசகர்கள் யாழ்ப்பாணத்துத் தமிழுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதாடுவது என் காதில் விழுகிறது. யாழ்ப்பாணத்துத் தமிழில் எழுதத் தெரியாமலில்லை! 'அடுத்த வீட்டுத் தம்பி கையில் கொடியும் முகத்தில் கவலையுமாக வந்தான்' என்று எழுதினுல் அவன் கையில் கொண்டுவந்த ''கொடி'' என்னவென்று தெரியாமல் நீங்கள் மலைப்பீர்களே, என்றுதான் நாங்கள் பழகிப்போன இந்தியத்தமிழில் இயம்பினேன்.

யாழ்ப்பாணத் தமிழ் ஆனையிறவுப் பாலத்துக்கு அப்பால் போகாமல் நின்றுவிட்டது. இந்தியத்தமிழோ பாக்கு நீரிணையையும் இந்துமகா சமுத்திரத்தையும் கடந்து வடக்கே வல்லிபுரக் கோயிலில் இருந்து தெற்கே தெவிநுவரை அல்லது தீவாந்தர முனை வரை வியாபித்திருக்கின்றது. இந்த நிலைமையில் நான் இந்தியத் தமிழில் எழுதாமல் என்ன செய்ய!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமிழ் வளர்த்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வளவுகாலமும் பத்திரிகைப் பயிர் முளைக்கவில்லை. தெற்கிலே அதாவது கொழும்புமாநகரிலே 'அன்னியர்'களால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக செழித்து வளர்ந்து கிளைபரப்பி வந்திருக்கையில் தமிழ்ப்பண்ணையென்று சொல்லக்கூடிய யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஒரு தினசரிதானும் தோன்ருதிருந்ததேனே தெரியவில்லை!

நம்மவர்களிடையே பத்திரிகைப் பசி இன்று போல் அன்றும் இருக்கத்தான் செய்தது. அதனுலன்ருே இந்தியச் சரக்குகளுக்கு இங்கு ஏராளமான வாடிக்கைகாரர் இருந்தார்கள்; இன்றும் இருக்கிருர்கள். இந்தியப் பத்திரிகைகளின் படையெடுப்பினுல் யாழ்ப்பாணத் தமிழும் மட்டக்களப்புத் தமிழும் தலையெடுக்கமுடியாது போயின. இந்தியத் தமிழ் இலங்கையில் வேருன்றிவிட்டது.

### என்ன புண்ணியம் செய்தோமோ!

யார் செய்த புண்ணியமோ. இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் காகிதப் பஞ்சம், மைப்பஞ்சம், தொழிலாளர் பஞ்சம் முதலியன தலைவிரித்தாடும் போது, ஒரு தினசரியும் பல வாரஇதழ்களும் பிரசுரமாகி வருகின்றன. காலம் கடந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இம் முயற்சிகள்மூலம் கருதும் பலன் கிட்டுமென்று எதிர்பார்ப்போமாக.

அடடா! என்னவோ சொல்ல வந்து எதையோ சொல்லிக்கொண்டு போறேனே, அம்பிப்பயல் பட்டம் கட்டிப் பறக்கவிட்டான்; அது குத்துக்கரணம் போட்டுக் குப்புற வீழ்ந்துவிட்டது. அதை ஆகாயத்தில் பறக்கச்செய்வதற்கு வழிகேட்டான், என்னை. ''வாலைக் கட்டிவிட்டுப் பார்'' என்றேன்.

''இது வாலில்லாப் பாம்பன்! வாலில்லாமலே பறக்கவேண்டும்'' என்ருன் அவன்.

''அம்பி! எனக்குப் பட்டம் கட்டவோ பறக்க விடவோ தெரியாதே'' என்றேன்; முகத்தில் அசடு வழிய.

அம்பியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. கையில் வைத்திருந்த பட்டத்தை கிழித்து எறிந்தான். ''ருஷ்யாவிலே சந்திரமண்டலத்துக்குப் போறுன், பூமியைச் சுத்துருன். உங்களுக்குப் பட்டம்கூடக் கட்டத் தெரியலை. மாமா ஒரு அசல் 'இடியட்' என்று பொரிந்து தள்ளிவிட்டுப் போதாதற்கு ''வெவ்வெவ்வே'' என்று அழகுகாட்டிச் சிட்டாய்ப் பறந்தான் அம்பி.

அம்பியின் சின்ன மூளையில் தோன்றிய பெரிய உண்மை என் உள்ளத்தில் சாட்டையால் அடித்தது. உலகத்திலே நாங்கள் பிரமிக்கத்தக்க எத்தனையோ அதிசயங்கள் நடக்கின்றன. ஆத்துக்காரி கோட்டைக் கீறிக் குந்திக்கொண்டால், கோப்பி போட்டுக்குடிப்பதற்குக்கூட கேத்திலில் நீர் கொதிக்க வைக்கத் தெரியாமல் திண்டாடுகிறோம் நாங்கள். அம்பிப்பயலைப்போன்ற ஒரு சிறுவன்தான் கேத்தலில் தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கையில் நீராவி அந்தக் கேத்தலின் மூடியை உந்தித்தள்ளியதைப் பார்த்துவிட்டு ரயிலைக் கண்டுபிடித்தான் என்றகதையைநம்புவதற்குப் போதிய அறிவுகூட எங்களுக்கு இல்லை

### உலகம்போற்றும் உத்தமர்கள்

மகாத்மாகாந்தி கத்தியின்றி இரத்தமின்றி ''வெள்ளையனே வெளியே போ'' என்ற சுலோகத்தை உச்சரித்து அடிமைநாடாகவிருந்த பாரதநாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார். சிவபெருமான் குடும்பத்தோடு குடியிருப்பதாக எண்ணிக் கிட்டப் போகக்கூட நாங்கள் பயந்துகொண்டிருந்த இமயமலையின் கொடுமுடியில் அடிவைத்துக் கொடி நாட்டினர் டென்சிங்கும், ஹிலாறியும். சந்திர மண்டலத்தில் அரிவாள் சம்மட்டிச் சின்னத்தைப் பொறித்தார்கள் ருஷ்யர்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை வலம் வருதற்கு நாம் சிரமப்படுகையில், பூமண்டலத்தையே நொடிப்பொழுதில் சுற்றிவந்துவிட்டார்கள் ககாரினும் டிடோவும். இவர்கள் எல்லோருமே வீரதீரபுருஷர்கள்தான். இவர்களுக்கு உலகமே அஞ்சலி செய்கின்றது.

ககாரினுக்கும் டிடோவுக்கும் அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கவிருக்கிறது. அவர்களை இலங்கைக்கு வரும்படி கல்வி மந்திரி அழைத்திருக்கிறுர். ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய வீர புருஷர்கள் ஒருவரோ பலரோ இருக்கத்தான் செய்கிருர்கள். இலங்கையில் இருக்கிருர்களா என்று எண்ணிப் பார்த்தேன். ஆங்காங்குள்ள உருவச்சிலைகள் ''இருந்தார்கள்'' என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன. இருக்கிருர்கள் என்பதற்குச் சான்றைக்காணவில்லை. நம்ம பையன்கள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் செல்கிருர்கள் தான். ஆனுல் எந்த விளையாட்டிலும் வெற்றிவீரர்களாக விளங்கவில்லை. எங்கள் நாட்டு அழகு ராணிகள் உலக அழகுராணிப் போட்டிகளில் பங்குபற்றத் தான் செய்கிருர்கள். ஆனுல் இவர்களின் அழகைப் போட்டி நீதிபதிகளுக்கு ரசிக்கத் தெரியவில்லையோ என்னவோ இலங்கை அழகி ''உலக அழகு ராணி'' யாக தெரிவுசெய்யப்பட்டதே கிடையாது.

இன்று இலங்கையில் உலகப் புகழுக்கு அருகதையானவர் ஒருவர் இல்லை ஒருத்தி இருக்கிறுரென்றுல் அவர் இல்லை அவ எங்களுடைய பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காதான். அதிகம் படிக்காமல், அரசியல் அனுபவமில்லாமல், ஒருதடவையாவது எலக்சனில் தோற்காமலும் கட்டுக்காசைஇழக்காமலும், பதவிக்காக கட்சிவிட்டுக் கட்சி பாயாமல், அங்கத்தவர்களைக் காக்காய் பிடிக்காமல், பாளிமேந்தில் ஒருநாளாவது இருக்காமல், எதிர்க்கட்சியின் கெடுபிடிக்கு ஆளாகாமல் புழக்கடை வழியாகப் பிரதமர் ஆனவர் இவர் ஒருவரே!

### வீடுகொடுப்பவருக்கு வீடில்லையா?

அனுராதபுரத்தில் இருக்கும் தேசிய வீடமைப்பு உதவிக் கொமிஷனருக்கு குடியிருப்பதற்கு வீடு கிடைக்கவில்லையாம். எல்லாருக்கும் வீடுகட்டுவதற்குக் கடன் கொடுக்கும் இந்தப் பெரிய ஆபீஸருக்கு வீடு கிடைக்கவில்லையென்பதைக் கேட்டு ஸ்ரீமான் பொதுசனம் மூக்கில் விரல்வைக்காமல் ஆச்சரியப்பட்டார்.

''தேசிய வீடமைப்புக் கொமிஷனர் வீடுகிடைக்கவில்லையென்று விசனப்பட்டுப் பயனில்லை. அவர் ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குகிறுர். ஒரு காரை வைத்துக்கொண்டு பத்துப் பதினைந்துமைல் தூரத்துக்குள் ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கலாமே!'' என்றேன் நான்.

''மாயாவி''

# 'தியாக' சிரோன்மணி

"ஆண்கள் ஸ்ரீதனம் வாங்கக்கூடாது" என்று சுமார் 15 வருடங்களுக்கு முன் வெகு தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்த நியாய துரந்தரர் தனது சொந்த வாழ்க்கையிலும் ஸ்ரீதனம் வாங்காமலே கல்யாணம் செய்து வாலிபர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினர். ஆனால் சிறிது காலத்துக்குள் பாவம் அந்த மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு பின் ஒருத்தியை ஸ்ரீதனத்தோடு மணந்துகொண்டார். இதுபற்றி சமீபத்தில் அவரை நான் நாசுக்காகக் கேட்டேன்.

அவர்:- நாங்கள் செய்யும் தியாகத்தைப் பெண்கள் உணர்வதில்லை. பதிலுக்கு நம்மைத் தாழ்வாக மதிக்கிறார்கள்.

நான்:- ஸ்ரீதனம் வாங்காத ஆண்கள் அதைத் தாம் செய்யும் தியாகம் என்று நினைக்கலாமா?

அவர்:- ம்......தியாகமல்லவென்றால் எமது முற்போக்குக் கொள்கைக்கு அவர்கள் மதிப்பளிக்கவேண்டுமல்லவா?

நான்:- எமது நடவடிக்கைக்குப் பெண்கள் நன்றிக்கடன்பட்டிருக்கவேண்டும் என்று நாம் எதிர் பார்ப்பது முறையா?

"உம்முடைய கேள்விகளுக்கு யான் பதிலளிக்க முடியாது" என்று சீறி விழுந்தார் வழக்கறிஞர். நான் பேசாமல் எழுந்து நடையைக் கட்டினேன். இவர் முந்திய மனைவியை ஏன் விவாகரத்துச் செய்தார் என்ற விஷயத்தை யறிய மனம் அவாவியது. பெண்கள் உறவினர்கள்மூலம் சேகரித்த சில தகவல்கள்:-

மணமான சிலநாட்களுக்குப்பின் அந்தப் பெண்ணின் உறவினரான ஒருவரைப்பற்றிப் பேச்சு வந்ததாம். பேச்சுவாக்கில் அவள் கூறினாள்:

"அவருக்கு லட்சக்கணக்கில் ஸ்ரீதனம் பேசிப் பல இடங்களிலிருந்து வருகிறார்கள். அந்த மனிதன் ஸ்ரீதனம் போதாதென்று அடம்பிடிக்கிறது. அவருக்குப் பெரிய உத்தியோகமாம். அதோடு சொத்துமிருக்கிறது. அதுதான் பெண்ணைப் பெற்றவர்கள் போட்டியிடுகிறார்கள் பணத்தையும் கட்டி வைத்துக்கொண்டு."

"உம்......அப்படியா?"


"ஆமாம், அவரென்ன சாதாரண ஆளா? குறைந்தது இரண்டு லட்சமாவது ஸ்ரீதனம்வாங்காமல் கல்யாணம் செய்யமாட்டார்."

"அப்போ ஸ்ரீதனம் வாங்காமல் கல்யாணம் செய்பவர்களெல்லாம் சாதாரண 'துந்தன்னா' பேர்வழிகளாக்கும்......"

"இல்லை......நான் சொல்வது என்னவென்றால்......"

"நீ என்ன சொல்ல இருக்கிறது.....ஒருவன் செய்த தியாகத்துக்கு நன்றி செலுத்தத் தெரியாத நச்சுப் பாம்புகள் நீங்கள்........."கணவன் பொரிந்து தள்ளினான் முடிவில்லாமல். அதன் விளைவு விவாகரத்தில் கொண்டுபோய்விட்டது.

## சோஷலிசப் பாதையில் அரசாங்கம் முன்னேறுகிறது!




## களனி நதி தீரத்திலே...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நியமனமாகி ஒரு கம்பெனியில் டைப்பிஸ்ட் பதவியை அன்றுதான் அவள் ஏற்க இருக்கிறாள்.— இத்தனை தகவல்களையும் நடராசன் திரட்டிக்கொண்டுவிட்டான்!

ராக்ஸி ஆட்டுப்படித் தெரு, ஐந்து லாம்படிச் சந்து, பொது பஸ் நிலையம், நொறிஸ் வீதி முதலியவற்றைக் கிழித்துக் கொண்டு வந்து கோட்டையில் நின்றது. நாங்கள் இறங்கினோம்.

"உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்கிறேன். மிக்க நன்றி."— றோசலின் மிக மகிழ்வோடு முகம் மலரக் கூறினாள்.

"உங்கள் புதிய வேலையில் சிறப்புப்பெற வாழ்த்துக்கள். மீண்டும் சந்திப்போம்" நாங்கள் வாழ்த்துத் தெரிவித்தோம்.

"வருகிற ஞாயிற்றுக்கிழமை களனிகங்கை கரையில் உங்களை எதிர்பார்க்கிறேன்"

றோசலின் எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள்.

நானும் நடராசனும் எங்கள் கந்தோர்களை நோக்கி வேகமாக நடந்தோம்.

எனது மனவெளியில் றோசலின் களனி நதியில்-நடு ஆற்றில் எழில் வண்ணத் தேவதையாக-நீரர மகளிராக குதித்து, எழுந்து குதூகலித்து —நீந்திவிளையாடும் நிகழ்ச்சி எழுந்து தோன்றியது.


(வளரும்)

### "பாவம் அவளுக்கும் கொடுங்கள்!"

"கண்ணே! உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் உனக்கே அர்ப்பணித்துவிடுகிறேன்.." என்று, தான் மனதைப் பறிகொடுத்த மங்கையிடம் சொன்னான் ஒருவன்,

"என்ன? ... என்னை நீங்கள் அவ்வளவு ஈவிரக்க மற்றவளென்று எண்ணிக் கொண்டீர்கள்? நீங்கள் முதலில் சொன்ன உடலையும், பொருளையும் எனக்குத் தந்தால் போதும். மூன்றாவது சொன்ன அந்த 'ஆவி'யை நீங்கள் தாலி கட்டிய உங்கள் மனைவியிடமே கொடுத்துவிடுங்கள் ... பாவம் அவளும் பெண் அல்லவா?" என்றுசொன்னாள் அந்த விலைமாது!

டுவைபோட்ஸ், ஷாங்ஸ்
டிரெயினேஜ், தண்ணீர்க் குழாய்கள்.
குளிக்குமறைத் தளபாடங்களுக்கு
எங்களிடம் கலந்தாலோசியுங்கள்.
இறக்குமதியாளரும் விற்பனையாளரும்:
எம். எல். எம். பவுஸ் அன் கோ
49, குவாரி றோட், கொழும்பு-12
ஸ்டோர்ஸ்: 69, குவாரி றோட், 144, மெசஞ்சர் வீதி,
16, வார்ட் பிளேஸ்.


Abdulla & Co.
QUALIFIED OPTICIANS
(QUALIFIED IN BOMBAY)
Phone: 486. K. K. S. ROAD, JAFFNA.

Registered as a newspaper at the G. P. O

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

# சங்கதி தெரியுமா?

● மூதூர் இடைத்தேர்தலில் பிரபல அரசியற் கட்சியொன்றின் சார்பில் அபேட்சகராக நிற்க முன்னை நாள் எம். பி. முகம்மது அலியும், திரு. நேமிநாதனும் முயன்று வருகிறார்களாம். அவர்களில் ஒருவர் அக்கட்சிப் பிரமுகர்களின் ஆதரவை ஏற்கனவே பெற்றுவிட்டாராயினும் மற்றவர் தன் வாக்குப் பலத்தைக் கொண்டு கட்சி முத்திரையைப் பெற கங்கணம் கட்டிநிற்கிறார். முத்திரைக்கு எவ்வளவு காலம் அவர் மதிப்புக்கொடுப்பார் என்பதே தெரிய வேண்டிய சங்கதியாகும்.

*   *

● சம்மாந்துறை ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் பல வருடகாலமாக நடைபெறாத மர்மம் என்ன? பதவி வகிக்கும் உத்தியோகத்தர் சிலர் சங்கப் பணத்திலிருந்து பெரிய பெரிய தொகைகளைத் தங்கள் சொந்தத்தேவைகளுக்காக 'கைமாற்று' பெற்றிருப்பதாகப் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். கொடுக்கப்பட்ட நெல்லுக்கு உடனுக்குடன் பணம் கொடுக்கப்படாமல் காலம் தாழ்த்துவது போன்ற சீர்கேடுகளை நிவர்த்திக்கும் முகமாக மேற்படி சங்கப் பொதுக் கூட்டத்தை எப்படியும் கூட்டுவித்து நிர்வாகிகளை மாற்றவேண்டுமென்று ஒரு இயக்கம் வளர்ந்து வருவதாகத்தெரிகிறது.

*   *

● தன் உத்தியோகஆசையை நிறைவேற்ற இளம்அரசியல் வாதி ஒருவரின் காலைப் பிடிக்கப்போய்க் கடைசியில் கற்பை இழந்த மங்கை யார்?. அந்தப் பிரமுகரினால் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்ட ஆரணங்குபுகையிரதப்பிரயாணத்தின்போதுபெற்ற புதிய அனுபவம் என்ன?.

*   *

● நாட்டிய தாரகை குமாரி கமலாவைப் பேட்டிகண்டபோது தென்னாபிரிக்க அரசியல் பிரச்சனை பற்றி அவரிடம் கேள்வி கேட்டு அவமானப்பட்டவர் இப்போது இலங்கைத் தினசரி யொன்றில் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவராம். நந்தனார் புகழ் சுந்தராம்பாளிடம்நேருவுக்குப் பின்யாரென்றுகேட்டவர் மற்றொரு பத்திரிகாலயத்தின் செல்வப் பிள்ளையாக இருந்துவரும் கற்றுக் குட்டி உதவியாசிரியையாகும்.

*   *

● "சானா" என்ற புனைபெயர் இலங்கை வானொலி தமிழ் நாடகத்துறைப் பொறுப்பாளர் திரு. சண்முகநாதனுக்கு மட்டும் சொந்தமானதல்ல, சச்சிதானந்தமும் "சானா" வேதான் என்று, இரவல் பெயரில் புகுந்து கொண்டு விட்டார் இன்னொரு வாலிபர் என்பதைப் பத்திரிகைச் சுவரொட்டி யொன்று பறைசாற்றுகின்றது.

## ஆஸ்பத்திரி சுவீப் (156) முடிவு

1-ம் பரிசு 19 U 0803 ரூபா 66,550-00
2-ம் பரிசு 02 Q 0785 ரூபா 33,275-00
3-ம் பரிசு 19 M 0743 ரூபா 16.637-50

25 பரிசுகள் ரூபா 665-50 விதம்

19 E 0199, 05 D 0774, 07 O 0054, 16 B 0503, 11 F 0794, 09 Y 0618, 11 C 0530, 20 Y 0423, 21 K 0923, 01 S 0452, 11 U 0360, 12 B 0992, 03 Y 0958, 03 K 0282, 17 R 0225, 10 N 0221, 06 P 0091, 17 O 0216, 12 E 0988, 04 S 0571, 14 A 0913, 08 Y 0741, 11 P 0234, 13 X 0055, 11 D 0353

*   *

● 'ஸ்போர்ட்ஸ் கிளப்' முதலாளி ஒருவர் வருமானவரி இலாகாவை ஏமாற்றிய சுவையான விபரங்களும் இப்பொழுது வெளிவரத் தொடங்கியுள்ளன. பிரபல 'ஷோ' முதலாளியும், கொழும்பில் 'காணிவல்' ஒன்று நடத்தியதன் மூலம் ஏராளமான பணம் சம்பாதித்தவருமான 'நைட்கிளப்' முதலாளி ஒருவர் காலமானதும் அவரது சொத்துச் சம்பந்தமாகச் சில சிக்கல்கள் எழுந்தன. அந்த 'நைட் கிளப்' முதலாளிக்கு இலங்கையில் மட்டுமின்றி இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளிலும் ஏராளமான சொத்துக்கள் உண்டு. அந்தச் சொத்தின் மதிப்பை வெளியிட்டால் ஏராளமான வரி செலுத்தவேண்டி நேரிடும். வாரிசுதாரர்களில் ஒருவர் "இந்தச் சொத்து விஷயங்களைச் சிறிது காலத்திற்கு மறைத்து வைத்திருப்போம். பின்னர் நமக்குள் பங்கிட்டுக் கொள்ளலாம்" என்று மற்றைய வாரிசுதாரர்களைப் பார்த்துக்கூறினாராம். அதனை அவர்களும் நம்பினார்கள் ஆனால்இப்பேரதுதான் வருமானவரிஇலாகாவுக்கு நாமம் சாத்தியதோடுநில்லாது தங்களுக்கும் நாமம் சாத்திவிட்டார் என்பதை மற்றைய வாரிசுதாரர்கள் உணர்ந்தனர். விஷயம் கோடுவரைக்கும் சென்றுள்ளது.

*   *

● "கல்கி"யின் இலங்கை மாவட்டச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெறத் தவறிய கதைகளிற் சில ஈழத்து இலக்கிய வெளியீடொன்றில் அண்மையில் பிரசுரிக்கப்படலாம். போட்டி முடிவுக்குச் சவால் விடுக்கும் முகமாகவே இந்த அரங்கேற்றம் நடைபெறப் போகிறது.

## அஜீரணத்தால் அவஸ்தைப்படுகிறீர்களா?

# யானை பீடியை உபயோகியுங்கள்.


★ உடனே குணம் தெரியும்! ★

பீடி உலகிலேயே தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டது

யானை பீடி

புகழ் வாய்ந்தது.

★




இலங்கையில் தயாரிக்கப்படுவது,

உள் நாட்டுக் கைத்தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளியுங்கள்.

யானை பீடி

என்று கேட்டுவாங்குங்கள்.

★

யானை பீடி எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

# யானை பீடி கம்பெனி

62, மெசஞ்சர் வீதி : : கொழும்பு 12

தொலைபேசி எண்: 7651

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'